# Vijey விஜய் විජය්

20.01.2016 - மலர் 12, இதழ் 47

இந்த இதழுடன்

Public Utilities Commission of Sri Lanka

அனுசரணையில் வழங்கப்படும்...

காலஅட்டவணை




இலவசம்



## உலக பத்திரிகைகளின் சுவாரஸ்யமான தகவல்கள்

விலை ரூபா 15/-

February 2016

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 1 | 2 | 3 | 4 | 5 |

மாதங்களுக்கு பெயர் வந்த விதம்



நெக்டோ பென்சாவின் கதை

(9ஆம் பக்கம்)

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

ISSN 1391-9504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஜோன்-சியேன் தம்பதியருக்கு எத்தனை பிள்ளைகள்?

..............................................................................

2. ஜோன்-சியேன் தம்பதியினரின் பேரப்பிள்ளைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.


..............................................................................

3. இக்குடும்பத்தில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

..............................................................................

4. இவர்களில் கூடுதலாக இருப்போர் ஆண்களா? பெண்களா?

..............................................................................







1. இங்கு கயிற்றில் தொங்க விடப்பட்டிருப்பவை குறிப்பது;

1. மாதங்கள்
2. நாட்கள்
3. இலக்கங்கள்




2. இந்தப் படத்திற்குப் பொருத்தமான தலைப்பொன்றை எழுதுக.

3. 'Tuesday' என்பதனை தமிழில் எவ்வாறு குறிப்பிடுவர்?

..............................................................................

4. ஒரு மாதத்தில் எத்தனை வாரங்கள் உள்ளன?

..............................................................................



1. கூடையில் பழங்கள் ..........................
(உள்ளது/உள்ளன)



2. .............................. நீர் உள்ளது.
(பானையில்/ குவளையில்)



3. பெட்டியின் ..............................
எலியொன்று காணப்படுகின்றது.
(மேலே/கீழே)



4. மரத்தின் கீழே ..............................
உள்ளது.
(குரங்கொன்று/ நாயொன்று)



இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4, 5 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.

(ஜீநு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டின் சிறந்த புகைப்படங்கள் சில...

2015 ஆம் ஆண்டில் உலகளவில் அதிகம் பேசப்பட்டதும் உலகையே வியப்பில் ஆழ்த்தியதுமான புகைப்படங்களின் தொகுப்பொன்று, அண்மையில் இங்கிலாந்தின் லண்டன் நகரில் இயங்கிவரும் ஊடக உள்ளடக்க நிறுவனமான பார்க்ரொஃப் மீடியா நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. இந்த தொகுப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த சில புகைப்படங்கள், உலகின் முன்னணி செய்தித்தளங்களான ஏ எஃப் பி, ரொய்ட்டர், பிபிசி, சி என் என் ஆகியவற்றில் வெளியாகியவையாகும்.

## யானை - முதலை மோதல்




தென்னாபிரிக்காவின் சாபி சேண்ட்ஸ் வன விலங்குகள் காப்பகத்தில் எடுக்கப்பட்ட புகைப்படமாகும். நீர்நிலையில் நீர் அருந்த வந்த யானையை இரையாக்கிக்கொள்ளும் நோக்கில், அதன் தும்பிக்கையைப் பற்றிப்பிடித்துக்கொண்ட முதலைக்கும், அதன் பிடியிலிருந்து தப்பிக்கப் போராடும் யானைக்கும் இடையிலான மோதலையே இந்த புகைப்படம் சித்தரிக்கின்றது.

## சிங்கத்தின் வேட்டை



தென்னாபிரிக்காவின் க்ரூகர் தேசிய வனத்தில் வாகன நெரிசல் மிக்க வீதியின் வழியே ஓடிய என்டிலொப் மான் ஒன்றினை குறுக்கே பாய்ந்து வேட்டையாடிய சிங்கம்.

## அஞ்சி நடுங்கிய சிங்கம்



கோபங்கொண்ட காட்டு எருமைகள் கீழே காத்திருக்க, அவற்றின் தாக்குதலுக்கு அஞ்சி தனது உயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டு மரத்தில் ஏறியிருக்கும் காட்டின் ராஜா. இப்புகைப்படம், கென்யாவின் மாசாய் மாரா தேசிய சரணாலயத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் நான்காம் திகதி எடுக்கப்பட்டுள்ளது.

## நத்தை மீதிருந்து அவதானிப்பு



இந்தோனேஷிய மழைக்காடொன்றின் நீர்நிலையில் காணப்பட்ட கற்பாறையில் இருந்த நத்தையொன்றின் மீது இருந்தவாறு அங்கும் இங்கும் அவதானிக்கும் வண்ணமயமான தவளை.

## எரிமலை ஏரியைக் கடந்து சாகசம்



வெப்பத்தினை தாங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட விசேட ஆடையை அணிந்துகொண்டு வனுவாட்டுவிலுள்ள எரிமலைக் குழம்பினாலான ஏரியைக் கடக்கும் சாகசவீரர் சேம் கொஸ்மன் என்பவரின் சாகசத்தினைக் காட்டும் புகைப்படமே இது.

## ஏஷ்லி கேர்ப்பீல்



32 வயதான ஏஷ்லி கேர்ப்பீல் எனும் ஜோர்ஜிய நாட்டுப் பெண்மணி, தசைகள் எலும்புகளாக மாற்றமடையும் அரிய வகை மரபணு சார்ந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால், அவரது வலது கரம் மற்றும் கால் இயக்கங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, வலது கரம் அகற்றப்பட்டுள்ளது.

விஜய
Vijey විජය
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## ராட்சத ஹல்க்




பிட்புல் நாய் வகையைச் சேர்ந்த உலகின் மிகப் பெரிய நாயாகக் கருதப்படும் 175 றாத்தல் எடை கொண்ட 'ஹல்க்', அதன் உரிமையாளரான மார்லன் கிரேனன் மற்றும் அவரது மகன் ஜோர்டன் ஆகியோருடன் காணப்படுகின்றது.

## மின்னல் தாக்கங்கள்



தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பேர்க் நகரில் ஒரே நேரத்தில் ஏற்பட்ட மின்னல் தாக்கங்களை சித்தரிக்கும் புகைப்படம். உலகை வியப்பில் ஆழ்த்திய இயற்கை நிகழ்வாக இது அமைந்திருந்தது.

## ஒரேயொரு வெள்ளை ரைனோ



கென்யாவின் ஓல் பெஜேட்டா சரணாலயத்தின் ராணுவப் பாதுகாப்பில் வாழும் 'சூடான்' எனும் பெயருடைய உலகின் ஒரேயோர் ஆண் வெள்ளை ரைனோவினையே படத்தில் காண்கிறீர்கள். இந்த ஆண் வெள்ளை ரைனோ மரணித்தால், உலகில் இருந்து வெள்ளை ரைனோக்கள் முற்றாக அழிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆற்றுக் குகை



'தாம் கௌன் க்சே' என்பது மத்திய லாவோஸில் அமைந்துள்ள ஆற்றுக் குகைத்தொடராகும். இந்த குகையின் உள்ளே ஆறொன்று ஓடுகின்றது. அங்கு பசுமையான தாவரங்களும் வளர்ந்துள்ளதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர் துன்பத்தில் இன்பம் காணாதே




ஒரு பணக்கார மாணவன் காலையில் பாடசாலைக்கு செல்லும்போது வழியில் அவனுடைய ஆசிரியரைக் கண்டான். அவர்கள் இருவரும் உரையாடிக்கொண்டே தமது பயணத்தை தொடர்ந்தனர். செல்லும் வழியில் ஒரு பழைய சட்டை மற்றும் காலணிகளைக் கண்டனர். அப்போது அந்த மாணவன் ஆசிரியரிடம் அந்த ஆடைகள் இங்குள்ள வயல்வெளியில் வேலை செய்பவர்களுடையதாக இருக்கலாம் என்றான்.

பின்னர் அவன் அந்த ஆடைகளை ஒளித்து வைத்து விளையாட முடிவெடுத்தான் அதனை தனது ஆசிரியரிடமும் கூறினான். அதற்கு ஆசிரியர் "மற்றவர்களை துன்பப்படுத்தி அதில் நீ இன்பம் காண்பது ஒரு நல்ல மனிதனுக்கு அழகல்ல. விளையாட்டிற்குக் கூட மற்றவர்கள் நம்மால் துன்பப்படக்கூடாது" என்று ஆசிரியர் கூறினார். ஆனாலும், நீ அவர்களிடம் விளையாட வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டாய் எனவே நான் சொல்வதைப்போல் விளையாடு" என்று கூறினார் ஆசிரியர். "உன் கைகளில் இருக்கும் பணத்தை நீ அவர்களுக்கு கொடுக்க மனம் இருந்தால் அந்த விவசாயியின் பழைய சட்டைப் பையில் இந்தப் பணத்தை வைத்துவிட்டு ஒளிந்திருந்து நடப்பவற்றைப் பார்" என்றார்.

அந்த மாணவனும் அவ்வாறே செய்தான். ஒரு வயதான விவசாயி அவருடைய ஆடையை எடுத்து அணியும்போது அவருடைய சட்டைப் பையில் இருந்த பணத்தைக் கண்டார். பின்னர் சுற்றும் முற்றும் பார்த்தார், அவர் கண்களுக்கு யாருமே தென்படவில்லை. உடனே கதறி அழ ஆரம்பித்தார். "இறைவனே, என் மனைவி நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருக்கிறாள் அவளைக் குணப்படுத்த என்ன வழி என்று உன்னிடம் புலம்பினேன் யாரே ஒரு நல்லவர் மூலமாக இந்த பணத்தை எனக்கு அனுப்பி வைத்துவிட்டாயே உனக்கும் இந்த பணத்தை வைத்துவிட்டு சென்ற அந்த நல்ல மனிதருக்கும் நன்றி" என்று கூறிவிட்டு, 'என் மனைவியைக் குணப்படுத்த இது போதும் இறைவா' என்று அந்த முதியவர் அழுதார். அதைப் பார்த்த அந்த மாணவன் மெய்சிலிர்த்துப் போனான். அவன் கண்களில் நீர் வழிந்தது.

ஆசிரியர் மாணவனைப் பார்த்து "நீ நினைத்தது போல் செய்திருந்தால் அந்த ஏழை மனிதனுக்கு மனவருத்தம்தான் மிஞ்சியிருக்கும். ஆனால், இந்த விளையாட்டால் உன் மனம் பேரானந்தத்திற்கு உள்ளாகியுள்ளது" என்றார். அந்த மாணவனும் "இனி மனதால்கூட மற்றவர்களுக்கு தீங்கு நினைக்கமாட்டேன்" என்று உறுதி கூறினான்.

# அக்பர் வளர்த்த கிளி



துறவி ஒருவர், அக்பருக்கு அழகான கிளி ஒன்றைப் பரிசாக அளித்தார். அதை மிகவும் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்ட அக்பர், சேவகனை அழைத்து, இக்கிளியை "மிகவும் கவனத்தோடு, நீ வளர்த்து வர வேண்டும். இதற்கு ஏதாவது குறை ஏற்பட்டால் உனக்கு மரண தண்டனை அளிப்பேன்" என்று கட்டளையிட்டார்.

கிளியைப் பெற்றுக்கொண்ட சேவகன் தினமும் அதைக் கவனத்தோடு பாதுகாத்தான். ஆனால், சில மாதங்களின் பின்னர், கிளி நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டது. கிளி இறந்த செய்தி அரசருக்கு எட்டினால் மரணதண்டனை அல்லவா கிடைக்கும். செய்வதறியாது சேவகன் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தான். சொன்னாலும் தண்டனை, சொல்லாவிட்டாலும் தண்டனை கிடைக்கத்தான் போகிறது. இந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்பிக்க வழி என்ன?

பீர்பாலிடம் ஓடிச் சென்று அவர் காலில் விழுந்து வணங்கி, நடந்ததைக் கூறினான் சேவகன். "பயப்படாதே, நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என ஆறுதல் கூறி, பீர்பால் அவனை அனுப்பி வைத்தார். மறுநாள் வழக்கம்போல் அரச சபைக்குச் சென்ற பீர்பால் அரசரை வணங்கி விட்டு, "அரசர் பெருமானே, தங்கள் கிளி வார்த்தைகளைக் கூறவில்லை.... அசையாமல் இருக்கிறது" என்றார். "என் கிளிக்கு என்ன நடந்தது? நீர் என்ன சொல்கிறீர்? என் கிளி இறந்துவிட்டதா?" எனப்படபடப் போடு கேட்டார் அரசர். "மன்னர் பெருமானே! கிளி பெரிய துறவியைப் போன்று முகம் வானத்தை நோக்கியுள்ளது. கண்கள் முடிக்கொண்டிருக்கின்றன!" என்றார் பீர்பால்.

உடனே விரைந்து சென்று கிளியைப் பார்த்தார் அக்பர். கிளி கூண்டுக்குள் இறந்து கிடந்தது. "கிளி இறந்துவிட்டது" என்று ஏன் முன்பே சொல்லி இருக்கக்கூடாது?" என்றார் அக்பர் "அது எப்படி சொல்ல முடியும்? தாங்கள் விரும்பினால் அவ்வாறு சொல்லலாம். ஆனால், அது பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்" என்றார் பீர்பால். மக்கள் உம்மைப் புத்திசாலி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு கிளி உயிரோடு இருக்கிறதா? இறந்துவிட்டதா? என்பதைக்கூட உம்மால் அறிந்துகொள்ள முடியவில்லையே, கிளி இறந்துவிட்டது என்று முன்பே நீர் கூறியிருந்தால், நான் இவ்வளவு சிரமத்தோடு இங்கே வந்திருக்க வேண்டியதில்லை அல்லவா? என்றார் அக்பர்.

அரசர் பெருமானே "அதை எப்படி சொல்ல முடியும்? கிளி இறந்துவிட்டது என்று முன்பே நான் கூறி இருந்தால் எனக்கு மரண தண்டனை அல்லவா விதித்திருப்பீர்கள். அதைக் கேட்ட அக்பர் சேவகனிடம் தாம் முன்பு கூறியிருந்ததை நினைவுகூர்ந்தார். நல்ல வேளையாக, நன்றியுள்ள அந்த சேவகனை தந்திரமாகக் காப்பாற்றிய பீர்பாலின் மதியுகத்தைப் புகழ்ந்தார் அக்பர்.


'விஜய்' பத்திரிகையை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள

| | 1 வருடத்திற்கு | 6 மாதங்களுக்கு |
|---|---|---|
| கொழும்பு | ரூ 780/= | ரூ 390/= |
| கொழும்புக்கு வெளியே (தபாலில்) | ரூ 1560/= | ரூ 780/= |

கட்டணம் செலுத்தும் முறை:

- நேரடியாக செலுத்த முகவரி:- Subscription Division, Wijeya Newspapers Ltd. No-08, Hunupitiya Cross Rd, Colombo-02
- காசுக்கட்டளை (Money Order):- பெறுபவர் பெயருக்கு Slave island post office என குறிப்பிட்டு குறித்த காசுக்கட்டளை சிட்டையை பதிவுத் தபாலில் அனுப்பவும்.
- காசோலை (check):- Wijeya Newspapers என்ற பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய முகவரி: (பதிவுத் தபாலில்) - Subscription Manager, Tamil Vijei No-08, Hunupitiya Cross Rd, Colombo-02,

தொ.பே.இல: - 011-2307789, 0773710291

வெளிநாட்டிற்கு -Foreign
(1 வருடத்திற்கு)

| Countries | Amount (Sri lankan Rupees) |
|---|---|
| India | 4940.00 |
| Malaysia, Singapore, Oman, Thailand | 5200.00 |
| Saudi Arabia, Kuwait, Bahrain, U.A.E Brunei, Qatar | 5460.00 |
| Australia, Libiya, Malta, Sweden | 6916.00 |
| Britain, Denmark, France, Germany Italy, Netherland, Norway | 8060.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவின் விக்டோரியா மாநிலத்தைச் சேர்ந்த மேகி வேர்லே (Maggie Wehrle) என்ற பார்வையற்ற சிறுமியால் எழுதப்பட்ட 'The Underground Festival' என்ற கற்பனை கதை தேசிய விருதினை பெற்றுள்ளது. பார்வையற்றவர்களிற்கான கனடிய தேசிய நிறுவனத்தால் நடாத்தப்பட்ட எழுத்துப் போட்டியில் இவர் இந்த விருதினைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ரேட் கோன் தைஸ்ரோஃபி (Rod-Cone dystrophy) எனும் நோயினால் பாதிக்கப்பட்டவராவார். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு வடிவங்களையும் வெளிச்சத்தையும் மட்டுமே கண்டறிய முடியும். வேறெதுவும் பார்வைக்குப் புலப்படாது. இதனால், இவர் தனது நான்கு வயதில்



# பார்வையற்ற சிறுமியின் எழுத்தாற்றலுக்கு விருது

இருந்தே ஆட்காட்டி விரலைக் கொண்டு தடவிப் படிக்கும் முறையான பிரெயில் முறையில் எழுதவும் வாசிக்கவும் தொடங்கினார்.

இதனைக்கொண்டு தனது உலக அறிவை விரிவுபடுத்த புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினார். இதன்படி உலகம் எப்படி இருக்கும்? என்பதனையும் விளங்கிக்கொள்ள தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார். இதன் பிரதிபலிப்பாகவே தனது ஆற்றலின்மூலம் இத்தகைய விருதினையும் இவரால் பெற முடிந்துள்ளது.

இவருக்கு கிடைத்துள்ள இந்த தேசிய விருதானது, தன்னம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி எதிர்காலத்தில் ஒரு திறமையான எழுத்தாளராக உருவாக வலுச்சேர்த்துள்ளது என இவரின் ஆசிரியரான டப்னெ ஹிச்கொக் என்பவர் தெரிவித்துள்ளார்.

# 2016 ஆம் ஆண்டு பெப்ரவரியின் சிறப்பம்சங்கள்

PERIODICALS JAFFNA PUBLIC LIBRARY




**2016** ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மட்டும் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே கிடைக்கும் தனிச்சிறப்புகள் பல்வேறு உள்ளன. இந்த பெப்ரவரி மாதம் 29 நாட்களைக் கொண்டதென நம்மில் பலர் அறிவர். ஆனால், அதனை காட்டிலும் சிறப்பான ஓர் அம்சத்தை பெப்ரவரி மாத நாட்காட்டியில் அவதானிக்க முடியும். அதாவது, திங்களை தவிர்ந்த ஏனைய அனைத்து நாட்களும் நான்கு வாரங்களாகவும் திங்களானது, ஐந்து வாரமாகவும் அமைந்துள்ளது. இப்படியான ஒரு பெப்ரவரி மாதமானது, 823 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வரும் என ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மின்சார அனர்த்தங்களை தவிர்ப்போம்

வீட்டில், சுற்றுப்புறத்தில், பாடசாலையில் ஆகிய இடங்களில் மின்சார அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? இவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை வடிவமைத்து பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வெல்லுங்கள்.

## நாடளாவிய சுவரொட்டி (போஸ்டர்) போட்டி...!



வீட்டில், சுற்றுப்புறத்தில் அல்லது பாடசாலையில் ஏற்படக்கூடிய மின்சார அனர்த்தங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? மின்சார அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு நாம் அனைவரும் தெளிவை பெறல் வேண்டும். அத்துடன் அவற்றை தவிர்ப்பதற்கு, அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் நம் அனைவரதும் கடமையாகும்.



**இப்போட்டியில் தரம்: 6, 7, 8, 9, 10-11 என 5 பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.**

### சகல பிரிவுகளிலும் வெற்றி பெறுவோரில்...

முதலாவது இடத்திற்கு - ரூ 20,000
இரண்டாவது இடத்திற்கு - ரூ 15,000
மூன்றாவது இடத்திற்கு - ரூ 10,000

நான்காவது இடம் தொடக்கம் பத்தாவது இடம்வரை பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள். ஒவ்வொரு பிரிவிலும் தலா சிறந்த 200 சித்திரங்கள் வீதம் என 05 பிரிவிலும் மொத்தமாக தெரிவாகும் 1000 சித்திரங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

### சித்திரத் தலைப்பு

மின்சார அனர்த்தத்தை பிரதிபலிக்கச் செய்கின்ற அல்லது அதிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது தொடர்பாக எடுத்துக்காட்டுகின்ற எந்தவொரு கருத்தையும் உங்கள் படைப்பிற்கு தலைப்பாகக் கொள்ள முடியும்.

### போட்டி விதிமுறை/ நிபந்தனைகள்

* தலைப்பின் கீழ் ஒருவர் ஆகக்கூடியது 03 படைப்புகளை மாத்திரமே அனுப்ப முடியும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் அனைத்து சுவரொட்டிகள் (போஸ்டர்கள்) 18--14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
* பெஸ்டல் அல்லது நீர்ச்சாயம் போன்ற கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு நிறப் பூச்சையும் பயன்படுத்த முடியும்.

சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலை, பாடசாலை முகவரி, வகுப்பு, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம் மற்றும் மாகாணம், கையொப்பம் ஆகியன போன்ற விபரங்கள் அடங்கலாக பாடசாலை அதிபரின் அல்லது பிரிவுத் தலைவர் அல்லது வகுப்பு பொறுப்பாசிரியரின் உறுதிப்படுத்தல் அடங்கலாக கீழ்காணப்படும் முகவரிக்கு தபாலிட வேண்டும். அல்லது நேரில் வந்து கையளிக்கவும் முடியும்.

(தயவு செய்து உங்கள் விரபங்களை தெளிவாக எழுதுங்கள். ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது)

ஏற்பாடு: இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு...
மின்சாரத் தொழிற்றுறையின் பொருளாதார, தொழினுட்ப, பாதுகாப்பு ஒழுங்குறுத்துனர்.

**போட்டி நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.**


**போட்டி முடிவுத் திகதி: 29.02.2016**
**பரிசளிப்பு தினம்: மே மாதத்தில்...**

சித்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
மின்சார அனர்த்த பாதுகாப்பு,
'விஜய்'
த.பெ.இல - 2037
கொழும்பு

* மேலதிக விபரங்களுக்கு
எஸ்.கிருஷானந்த் - 0779900344

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பாவனையில் உள்ள முதல்தர விண்வெளி ரொபோக்கள் - 10



01

இந்த ரொபோ தேனீ மிகவும் சிறியது

## ரொபோ தேனீக்கள் (Robo bees)

தேனீக்களைப்போல மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்துவதே இதன் செயற்பாடாகும். செவ்வாய் போன்ற எதிர்காலத்தில் மனிதன் தனது வாழ்விடத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ள கோள்களின் மேற்பரப்பில் பயிர்களுக்குத் தேவையான மகரந்தச் சேர்க்கையை இதன்மூலம் மேற்கொள்ளலாம். இது ஹாவார்ட் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.



02

## வொல்கயர் ரொபோ (Valkyrie HumanoId)

செவ்வாய்க்கு மனிதனை அனுப்புவதற்கு முன்னர் மனித உருவ ரொபோவாக இந்த வொல்கயர் ரொபோவையே பயன்படுத்த உள்ளனர். சாதாரண ஒரு மனிதனின் உயரத்தைக் கொண்ட இந்த ரொபோ 130 கிலோகிராம் நிறையுள்ளது. இது மனிதனைப் போல் அமைக்கப்பட்டுள்ளமையால் கடினமான பிரதேசத்திலும் இலகுவாகப் பயணிக்கக்கூடியது.



03

## ஸ்பியர்ஸ் ரொபோ (Spheres Robot)

நாஸா நிறுவனம் தயாரித்த வட்டவடிவ தோற்றத்தைக் கொண்ட ஸ்பியர்ஸ் ரொபோ விண்வெளி மத்திய நிலையத்தில் உள்ள அறைகளில் ஏற்படும் தடைகளை நீக்கியபடி அங்குமிங்கும் பறந்து செல்லும் இதன் விட்டம் 25 சென்ரிமீற்றராகும். பறப்பதற்குத் தேவையான வலு காபன்டயொக்சைட் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.



05

## X1 எக்சொஸ் கெலட்டன் (X1 Exoskeleton)

நாஸா நிறுவனத்தின் தயாரிப்பாகிய இந்த X1 எக்சொஸ் கெலட்டன் இயந்திரத்தை ஒரு சிறு உடற் பயிற்சி உபகரணமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதனால், விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உடற்பயிற்சிகளை மேற்கொள்ள முடியும். இதற்கு முழங்காலுடன் சம்பந்தப்படுத்தும் நான்கு மூட்டுக்கள் உள்ளன.

## ஜஸ்டின் ரொபோ (Justin Robot)

ஜேர்மனிய விண்வெளி மத்திய நிலையத்தால் உற்பத்தி செய்யப்பட்ட இந்த ரொபோ செய்மதிகளைப் புதுப்பிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. 200 கிலோகிராம் நிறையுள்ள இந்த மானிட உருவம் கொண்ட என்ட்ரொயிட் ரொபோவுக்கு நான்கு சில்லுகளும் இரு கைகளும் இருக்கின்றன. இதனை புவியில் இருந்து இயக்கக்கூடியதாக உள்ளது.






04

## ரொபோநொட் 2 (Robonau t 2)

நாஸா நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்த ரொபோநொட் 2 உலகின் மிகப் புகழ்பெற்ற விண்வெளி ரொபோவாக கருதப்படுகின்றது. மனித உருவ ரொபோவான இதனை தற்போது சர்வதேச விண்வெளி மத்திய நிலையத்தில் உள்ளக மற்றும் வெளிவாரி சேவைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர். சுற்றுச் சூழலின் நிலைமை குறித்த தகவலை பெற்றுக் கொடுப்பதற்காக இந்த ரொபோவினுள் உணர்வலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இதனை புவியில் இருந்து டெலிப்ரிசென்ஸ் தொழில்நுட்பத்தின் மூலம் இயங்கச் செய்கின்றனர்.



செயற்பாடுகளை இலகுவாக்க ரொபோநொட்டுக்கு பாதங்களைப் பொருத்துவதற்கு நாஸா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

## டைடன் ஏரியல் டோடர்க்ராஃப்ட் (Titan Aerial)

சனிக்கிரகத்தின் மிகப்பெரிய உப கோளான டைடனை ஆய்வுசெய்வதற்காக உருவாக்கப்பட்டது. இது நாஸாவின் Innovative Advance Consepts கீழ் செயல்படும். இதனால் விண்ணில் பறக்கவும் தரையில் பயணிக்கவும் முடியும்.



08



09

டைடனையை ஆய்வு செய்த Titan Aerial

'மிராட்டா' வின் உற்பத்தியான திரோபோவின் இரட்டை ரொபோ



10

## டைடன் சப்மெரின் நீர்மூழ்கி (Titan Submarine)

நாஸா நிறுவனத்தின் தயாரிப்பான இந்த நீர்மூழ்கி ரொபோ மூலம் டைடனிலுள்ள நீர்த்தேக்கம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, டைடனில் உள்ள சமுத்திரங்களின் அடிப்பகுதி தொடர்பான ஆய்வுகளும், இதன்மூலம் மேற்கொள்ளப்படும்.



07



06

## வோல் க்லைம்பர் (Wall - Climber)


ஒரு சுவரின்மீது செங்குத்தாக நடமாடக்கூடிய இந்த Abigaille எனும் ரொபோ ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் தயாரிப்பாகும். இதன் பாதங்களுக்கு எதனையும் நன்றாக இறுகப் பிடிக்கும் திறமையுண்டு. அதற்கேற்ப 100 நெனோ மீற்றருக்கும் 200 நெனோ மீற்றருக்கும் இடைப்பட்ட அகலம் கொண்ட மயிர்கள் இதன் பாதத்தின்மீது அமைக்கப்பட்டுள்ளன.

## கிரொபோ (Kirobo)

ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ரொபோதான் கிரொபோ ஆகும். விண்வெளி செயற்றிட்டங்களில் சம்பந்தப்படும் விண்வெளி வீரர்களின் தனிமையைப் போக்குவதற்காக இந்த ரொபோவை பயன்படுத்த முடியும். இந்த ரொபோவுக்கு மனிதருடன் உரையாடவும் முடியும். அதன்படி, எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்தின்மீது மேற்கொள்ளப்படும் தனிநபர் செயற்றிட்டங்களில் இது முக்கிய பங்கு வகிக்குமென தெரிவிக்கப்படுகின்றது.

(அ) -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக அழிவு என்பது பொய்யல்ல. எனினும், சூரியனின் வெப்பசக்தி அதிகரிப்பால் நாம் வாழும் உலகத்தின் முடிவு என்பது இப்பொழுதே நடைபெறப் போவதில்லை. உலகில் உயிர் வாழ்க்கை என்பது இன்னும் 1.75 பில்லியன் ஆண்டுகள் வரை நீடிக்கும். சிலவேளைகளில் 3.5 பில்லியன் ஆண்டுகள்வரை உலகம் நிலைத்திருக்கும்.

# சூரிய வெப்ப அதிகரிப்பினால் உலகம் கருகிவிடும்!

## பூமியின் அமைவிடம்


சூரியனின் தற்போதைய வெப்ப நிலைக்குப் பொருத்தமான சரியான தூரத்திலேயே எமது பூமியின் அமைவிடம் உள்ளது. இதனை 'அதிர்ஷ்டம் மிக்க வலயம்' என்றே கூறுவர். இதன் காரணமாக, சமுத்திர நீர் ஆவியாகி வற்றி விடுவதும் இல்லை. மிகவும் குளிர்மையடைந்து உறைந்து பனிக்கட்டியாக மாறுவதும் இல்லை.

## அக்கினி நட்சத்திரம்

சூரியன் ஒரு நட்சத்திர அளவுக்கு அதிகமாக வெப்பத்தினை வெளியேற்ற ஆரம்பித்தால் அதனுடன் தொடர்புடைய கிரகங்களின் இயற்கை நீர் மறையத் தொடங்கும். இதனால், எந்தவொரு உயிரினங்களும் உயிர் வாழ முடியாத நிலை ஏற்படும். சூரியனில் இந்த மாற்றம் ஏற்பட்டவுடன் உயிர் வாழக்கூடிய அதிர்ஷ்டவசமான வலயம் மேலும் அதிக தூரத்தினை நோக்கிப் பின் தள்ளப்பட்டு விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## அதிர்ச்சியூட்டும் எதிர்வுகூறல்

ஐக்கிய இராச்சியத்தின் சிறப்பு மிக்க பல்கலைக்கழகமான 'ஈஸ்ட் என்க்லியா' பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் சிலரே, இந்த அதிர்ச்சியூட்டும் விஞ்ஞான ரீதியிலான எதிர்வுகூறலினை முன்வைத்துள்ளனர்.





இந்த நீலப் பூமிப் பந்தில் உள்ள நீர் அனைத்தும் சூரிய வெப்பத்தால் வற்றிய பின்பு பூமியின் முடிவு நிகழும் என்று ஈஸ்ட் அன்க்லியா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அதிர்ஷ்டமான வலயம்


எமது சூரியனின் ஆயுட்காலத்தின்படி, நாம் வாழும் 'இந்த அதிர்ஷ்டமான வலயம்' 6.3 பில்லியன் முதல் 7.8 பில்லியன் ஆண்டுகள் வரையுமே நிலவும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். இற்றைக்கு 4.55 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் உயிர்களின் தோற்றம் நிகழ்ந்தமையானது, இந்த அதிர்ஷ்டவசமான வலயத்தில் பூமி இருந்தமையால் ஆகும். இதன்படி இன்னும் 1.75 பில்லியன் முதல் 3.5 பில்லியன் ஆண்டுகள் மட்டுமே எமக்கு எஞ்சியுள்ளன. இந்த காலம் கடந்த பின்னர் 'அதிர்ஷ்டவசமான வலயம்' அதிக தூரம் தள்ளிச் சென்று விடும். இதனால், அதிக வெப்பப் பிராந்தியத்திற்குள் புவி பிரவேசிக்க நேரிடும் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

## புதிய இருப்பிடம்

மனிதர்கள் உயிர் வாழப் பொருத்தமான, சிறந்த வெப்பநிலையைக் கொண்ட வேறு ஏழு கிரகங்கள் பற்றியும் விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். அதனுள் பொருத்தமான சூழலைக் கொண்ட அதிக காலம் நீடிக்கக்கூடிய கிரகமாக கிலீஸ் 581 D என்ற கிரகத்தினைக் கண்டுபிடித்துள்ளனர். அதன் அதிர்ஷ்ட வலயம் 55 பில்லியன் ஆண்டுகள் வரை நீடிக்கும் என்று அறியப்பட்டுள்ளது. பூமியைப் போன்று இரு மடங்கு பெரிதான இந்த கிரகம் எமது பூமியிலிருந்து 20 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. இது மிக மிகத் தொலைவான தூரமாகும். எனினும், 10 ஒளி ஆண்டுகள் தொலைவில் மிக அண்மையில் வாழத் தகுந்த ஒரு கிரகத்தினைக் கண்டுபிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## புதிய ஆய்வுகள்

இதன்படி மனிதர்களினால் செல்லக்கூடிய மிக அருகில் இருக்கின்ற கிரகம் செவ்வாய்க் கிரகமாகும். சூரியனின் அதிர்ஷ்ட வலயம் பின் தள்ளப்பட்ட பின்னர் செவ்வாய் அந்த வலயத்திற்குள் வருகின்றது. இதன்படி செவ்வாய் கிரகத்தால் சூரியனின் ஆயுட்காலம் முடியும்வரை நிலைத்திருக்க முடியும். இந்த காரணங்களின் அடிப்படையில் செவ்வாயில் மக்கள் குடியிருப்புகளை அமைப்பதே பொருத்தமானதாகும். சூரியனின் வெப்பம் அதிகரிக்கும் வேகத்தின் அடிப்படையிலேயே ஆய்வாளர்கள் பூமியின் ஆயுட்காலத்தினைக் கணித்துள்ளனர். சூழல் விஞ்ஞானப் பிரிவினைச் சேர்ந்த சமுத்திர மற்றும் பூகோள விஞ்ஞானத்திற்கான ஆராய்ச்சிப் பிரிவே இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது.



இந்த படத்தில் பூமியை உங்களால் இனம்காண முடியும். வெப்பம் குறைவாகவும் இல்லாத அதிகமாகவும் இல்லாத அதிர்ஷ்ட வலயம் இதுவாகும்.

(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ..............................................................

01) **இப்பந்தியை வாசித்து கீழ் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

சூரியன் மறைந்து வானம் கருமையாக இருந்தது. விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் வானம் மப்பும் மந்தாரமுமாக இருப்பதைக் கண்டு விளையாட்டை நிறுத்திவிட்டு ஓடத் தொடங்கினர். திடீர் என்று மரங்கள் அங்கும் இங்கும் அசைந்தாடின. சாதாரணமாக வீசிக்கொண்டிருந்த காற்று, பலமாக வீசத் தொடங்கியது. காய்ந்த சருகுகள், கடதாசிகள் எல்லாம் பறக்கத் தொடங்கின. சில மரங்கள் முறிந்து வீழ்ந்தன. கூரைத் தகடுகள் சில பறந்தன. பலமாக வீசிய காற்று புயலாக மாறியது. மழையும் சோவென்று பெய்யத் தொடங்கியது.

01. இப்பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள காட்சி எது?
..........................................................................................

02. 'சூரியன் மறைந்தது' என்பதன் எதிர்ப்பதம் யாது?
..........................................................................................

03. பந்தியிலுள்ள இணைமொழிகள் எவை?
..........................................................................................

04. காற்றில் எவை பறந்தன?
..........................................................................................

05. பலமாக வீசிய காற்றுக்கு என்ன நடந்தது?
..........................................................................................

02) **பின்வரும் வாக்கியங்களில் உரிய நிறுத்தற்குறிகளை இடுக.**

01. மாம்பழம் பலாப்பழம் வாழைப்பழம் ஆகியவை முக்கனிகள் ஆகும்

02. அடேயப்பா எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி

03) **பின்வருவனவற்றின் கருத்தை தமிழில் தருக.**

01. Be careful - ..........................................................................
02. How are you? - ......................................................................
01. ஒயாகே கம கொஹேத? ..........................................................
02. மகே பொத கொஹேத? ...........................................................

04) **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.**

01. வேர்க்கொம்பு எனும் மூலிகை மருந்து எதிலிருந்து பெறப்படுகிறது?
1. திப்பிலி 2. இஞ்சி
3. மரமஞ்சள் 4. குறிஞ்சா

02. பூனைக்கு வயிற்றுவலி வந்தால் தேடி உண்ணும் தாவரம் எது?
1. குறிஞ்சா 2. ஆடுதின்னாப் பாலை
3. ஆனையறுகு 4. மூக்குத்திப் பூண்டு

03. கூட்டம் கூட்டமாக உணவு தேடிச் செல்லும் பறவை இனம் எது?
1. மைனா 2. கழுகு 3. சிட்டுக்குருவி 4. கிளி

04. அதிகளவு புரதம் நிறைந்த உணவு எது?
1. காளான் 2. மாஜரின் 3. முந்திரி 4. கிழங்கு

05. வீட்டுத் தோட்டத்தினுள் பூச்சி பீடைகள் அண்டாது இருக்க நடக்கூடிய தாவரம்;
1. துளசி 2. ஆமணக்கு
3. நாயுண்ணி 4. செவ்வந்தி




06. வீட்டினுள் இயற்கையாக வாழாத பிராணி எது?
1. வீட்டெலி 2. பல்லி
3. இராமபாணம் 4. தும்பி

07. சமைக்காது உண்ணக்கூடிய பச்சைக் காய்கறி எது?
1. புடோல் 2. கத்தரி
3. வெண்டி 4. ஈரப்பலா

08. 'ஆகாயத் தொட்டி' என அழைக்கப்படும் பிராணி எது?
1. காகம் 2. கொக்கு 3. கழுகு 4. பருந்து

09. அபாயம், ஆபத்து என்பதை வெளிப்படுத்தும் நிறம் யாது?
1. பச்சை 2. மஞ்சள் 3. சிவப்பு 4. நீலம்

10. வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்படும் கறிக்குச் சுவையூட்டும் தாவரம் எது?
1. கறுவா 2. மரமஞ்சள்
3. கரும்பு 4. இஞ்சி

05) **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை கோடிட்ட இடத்தில் எழுதுக.**

01. [75 65 / 32] பெட்டியினுள்ளே காணப்படும் எண்களை வரிசைப்படுத்தும்போது நடுவில் வரும் எண் எது? ..........................................

02. [16 2 / 4 / 32 8] பெட்டியினுள் தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி எண்கோலம் ஒன்றை அமைக்க.
..........................................................

03. இரண்டு வாழைப்பழங்களின் விலை ஒரு கொய்யாப்பழத்தின் விலைக்கு சமமானது. 4 மாம்பழங்களின் விலை ஒரு வாழைப்பழத்தின் விலைக்கு சமமானது. ஒரு மாம்பழத்தின் விலை ரூபா 15.00 எனின், ஒரு கொய்யாப்பழத்தின் விலை யாது? ........................................................

04. ரூபா 13.50 பெறுமதியுடைய பேனாவையும் ரூபா 55 பெறுமதியுடைய பென்சில் பெட்டியையும் வாங்கிய பின்னர், ரூபா 500 காசை கடைக்காரரிடம் கொடுத்தால், மீதியாகக் கிடைக்கும் பணம் யாது? ..........................................................

05. இரண்டு சதுர எண்களை குறித்துக் காட்டுக.
.............................. ..............................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி -I)

(ஜனவரி 13 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 05. 2 | 09. 1 | 13. 3 | 17. 2 |
| 02. 2 | 06. 1 | 10. 1 | 14. 2 | 18. 3 |
| 03. 1 | 07. 2 | 11. 3 | 15. 2 | 19. 1 |
| 04. 2 | 08. 3 | 12. 1 | 16. 1 | 20. 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எப்படி?



**கேள்வி:** எமது உடலின் வெப்ப அளவினைப் பார்க்கும்போது வெப்பமானியினை நாக்கின் அடியில் வைப்பது ஏன்?

**பதில்:** வெப்பமானி உடலில் வெப்பத்தின் அளவினை அளக்கப் பயன்படுகின்றது. குருதிக் கலங்களில் மற்றும் இதர கலங்களில் நிகழும் சுவாச செயற்பாட்டினால் வெளியேற்றப்படும் வெப்பத்தினால் உடல் வெப்பநிலை அதிகரிக்கின்றது. குருதிக் கலங்களில் மற்றும் இதர கலங்களில் வெப்பமானியினை வைத்து அளப்பது கடினம் என்பதனால் குருதிக்குழாய்கள் சருமத்திற்கு மிக அண்மையில் இருக்கும் பகுதியான நாக்கின் அடிப் பாகத்தில் வெப்பமானி வைக்கப்படுகின்றது.


**கேள்வி:** வேகமாக உடற்பயிற்சிகளை செய்யும்போது சிலரின் தசைகள் பிறழ்வது ஏன்?



**பதில்:** உடற் பயிற்சியின் போது தசைகள் சுருங்கி, விரிவடைகின்றன. இதற்கான சக்தியினை சுவாசம் தருகின்றது. சுவாசத்தின் போது உடலில் உள்ள குளுக்கோசும் ஒட்சிசனும் ஒன்றுடன் ஒன்று தாக்கம் புரிந்து காபனீரொக்சைட் மற்றும் நீராவியினை வெளியேற்றுவதன் மூலம் சக்தி பிறப்பிக்கப் படுகின்றது. இதற்காக தசைகளுக்கு ஒட்சிசனை குருதிக் குழாய்களில் உள்ள ஒட்சிசன் வழங்குகின்றன. உடற்பயிற்சியின் போது தசைகளுக்கு குருதியில் உள்ள ஒட்சிசன் கிடைக்காதபோது, சக்தியைப் பெறுவதற்காக குளுக்கோசில் காற்று அற்ற சுவாசம் நிகழுகின்றது. இதன்போது குளுக்கோஸ்களில் காபனீரொக்சைட் மற்றும் லக்டிக் அமிலம் உருவாவதுடன், ஓரளவு சக்தியும் பிறப்பிக்கப் படுகின்றது. இவ்வாறு உருவாகும் லக்டிக் அமிலம் தசைநார்களில் சேர்வதால் தசைப் பிறழ்வு ஏற்படுகின்றது.

**கேள்வி:** மரணச் சடங்குகள் நிறைவடைந்த பின்னர் மஞ்சள் நீர் தெளி்க்கப்படுவது ஏன்?

**பதில்:** ஒருவர் இறந்த பின்னர் அந்த உடலில் நுண்ணங்கிகளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கும். சடலத்தினை சில நாட்கள் வீடுகளில் வைத்திருக்கும்போது



நுண்ணங்கிகளினால் நச்சுப் பதார்த்தங்கள் வெளியாகி இருக்கும். இவை நோய்க்காவிகளாக மற்றவர்களின் உடலில் தொற்றி பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இதனால், கிருமிநாசினியாக தொழிற்படும் மஞ்சள் நீரினைக் கொண்டு வீட்டை சுத்தம் செய்கின்றனர். இது வீட்டில் இருக்கும் நுண்ணங்கிகளை அழித்துவிடுகின்றது.

# உலகில் பிரபல்யமானவர்கள்



## ஆர்ட் புச்வால்ட்


ஆர்ட் புச்வால்ட் 1925 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பிறந்தார். அமெரிக்காவில் பிரபல்யமான நகைச்சுவை கலைஞர்களில் இவரும் ஒருவர். 'த வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் இவருடைய ஆக்கம் பல வருடங்களாக வெளிவந்தது. இந்த ஆக்கம் உலகில் உள்ள பல பத்திரிகைகளில் மீள் பிரசுரம் செய்யப்பட்டது.

இவருடைய எழுத்துக்களில் அரசியல் நையாண்டி மற்றும் கருத்துக்கள் அதிக இடம் பிடித்தன. சொந்த கருத்துக்கள் அவருடைய ஆக்கத்தில் இடம்பெறாது. 1982 ஆம் ஆண்டு சிறந்த கருத்து ஆக்கத்திற்கான 'புலிட்சர்' விருதினை இவர் பெற்றார். 1986 ஆம் ஆண்டு American Academy and Institute of Art and Letters மூலம் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

இவர் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொரிஸிலிருந்து எழுதிய ஆக்கங்கள் மிக முக்கியமானவை. அங்கே 'தி ஹெரால்ட் ட்ரிப்யூன்' பத்திரிகைக்கு ஆக்கம் எழுதினார். 2006 பெப்ரவரி மாதம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது சிறுநீரகங்கள் செயலிழந்து வந்த நிலையிலும் உரிய சிகிச்சைகளைப் பெற மறுத்துவிட்டார். இவர் 2007 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி இறை எய்தினார்.

தொகுப்பு:
**ஜுனைட் எம்.பஹ்த்**

# ஓவியம் வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

### கொ/கைரியா முஸ்லிம் பெண்கள் கல்லூரி



**பெயர்:** நியுமா நஸீர்.
**புள்ளிகள்:** 160.



**பெயர்:** சஹானா இப்ஹாம்.
**புள்ளிகள்:** 155.



**பெயர்:** நூஹா ரிஸான்.
**புள்ளிகள்:** 154.



**பெயர்:** ருகைய்யா உஸ்மான்.
**புள்ளிகள்:** 154.



**பெயர்:** அஸீனா நுசைய்ஸ்.
**புள்ளிகள்:** 142.



**பெயர்:** எஃப்.மர்ஹா.
**புள்ளிகள்:** 181.
**பாடசாலை:** பு/ஹிதாயத் நகர் மு.ம.வித்., மதுரங்குளி.
**பெற்றோர்:** எச்.சாஜஹான்-எஸ்.றினோசா.



**பெயர்:** எஸ்.சபானா.
**புள்ளிகள்:** 164.
**பாடசாலை:** வெல்பொதுவெவ அல்-இல்மியா மு.ம.வித்., பொரளுவெவ.
**பெற்றோர்:** எம்.சிராய்தீன்-கே.ரிஸ்வானா.



**பெயர்:** ஆசிஃப் முகம்மத்.
**புள்ளிகள்:** 160.
**பாடசாலை:** வெல்பொதுவெவ அல்-இல்மியா மு.ம.வித்., பொரளுவெவ.
**பெற்றோர்:** எம்.நிஸ்பர்-எல்.இல்மியா.

### அல்-மனார் தேசிய பாடசாலை, கல்ஹின்னை



**பெயர்:** இஸட். ஸைனப்.
**புள்ளிகள்:** 169.
**பெற்றோர்:** சனீர்-ஷிஃபா.



**பெயர்:** எஃப்.ஹுன்னாஹ்.
**புள்ளிகள்:** 168.
**பெற்றோர்:** எம்.ஸகி-முனீரா.



**பெயர்:** ஆர்.அம்ரா.
**புள்ளிகள்:** 166.
**பெற்றோர்:** எம்.ரஃபாய்டீன்-நஸ்ரியா.



**பெயர்:** ஏ.ஆதிஃப்.
**புள்ளிகள்:** 165.
**பெற்றோர்:** அசாம்-நுஸ்ஹா.


உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாதங்களுக்கு

நாட்காட்டியினூடாக நாம் மாதங்கள், வாரங்கள், நாட்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்கின் றோம். இன்று உலகளவில் பயன்படுத்தப்படுகின்ற க்ரெகரியன் நாட்காட்டியானது, பன்னிரெண்டு மாதங் களை மையப்படுத்தியே அமைந்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு மாதத்திற்கும் பெயர் வந்த விதம் பற்றி இங்கு நோக்குவோம்.

## ஜனவரி



வருடத்தின் முதலாவது மாதமாக ஜனவரி (January) மாதம் கருதப்படு கின்றது. 'ஜானுஸ்' என்ற ரோமானி யக் கடவுளின் பெயரில் இருந்தே இப்பெயர் உருவாகியுள்ளது. தமிழ் வருடக் கணக்கின்படி, இது 'தை மாதம்' என்று அழைக்கப்படுகின் றது. சிங்களத்தில் 'துருது' என்பர். பிரான்ஸின் சாளிமேன் மன்னன் ஜனவரி மாதத்தினை 'குளிர் மாதம்' என்று குறிப்பிட்டுள்ளார். என்க்லோ செக்சன்கள் இந்த மாதத்தினை 'ஓநாய்களின் மாதம்' என்று குறிப் பிட்டுள்ளனர். காடுகளில் வாழும் ஓநாய்கள் இந்த மாதத்தில் நிலவும் குளிரின்போது உணவு தேடி கிராமங்களுக்கு வருகின்றமையி னாலேயே இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.





## பெப்ரவரி



வருடத்தின் இரண்டாவது மாதம் 'பெப்ரவரி' (February) ஆகும். பெரும்பாலும் 28 நாட்களையே கொண்டிருக்கும். நான்கு வருடங்களுக்கு ஒருமுறை 29 நாட்கள் கொண்ட மாதமாக மாறும். இந்த வருடத்தை 'லீப்' வருடம் என அழைப்பர். ஆரம்ப காலத் தில் இம்மாதத்தில் 30 நாட்கள் இருந்தன. ஜூலியஸ் சீசர் மன்னர் இந்த மாதத்தினை வருடமொன்றின் இரண்டாவது மாதமாக மாற்றியதோடு, இந்த மாதத்திலிருந்து ஒரு தினத் தைக் குறைத்து, அதனை ஜூலை மாதத்தில் சேர்த்தார். காலப்போக்கில் ஒகஸ்டஸ் சீசர் சக்கரவர்த்தி பெப்ரவரி மாதத்தில் இருந்து மற்றுமொரு தினத்தைக் குறைத்து, அதனை



ஒகஸ்ட் மாதத்தில் சேர்த்தார். இதனால், பெப்ரவரி மாதத்தில் 28 நாட்கள் மட்டுமே எஞ்சின. பண்டைய ரோமானியர்கள் கொண்டாடிய Februarius எனும் விழாவினை அடிப்படையாகக் கொண்டே இம்மாதத்திற்கு February என்று பெயரிடப்பட்டுள்ளது. தமிழில் இதனை 'மாசி' என்பர். சிங்களத்தில் 'நவம்' என அழைக்கப்படுகின்றது.

## மார்ச்



வருடத்தின் மூன்றாவது மாதமாகும். ஆங்கிலத்தில் 'March' எனப்படுகிறது. மார்ஸ் என்ற ரோமானிய யுத்தக் கடவுளுக்கான மாதமாகும். இந்த மாதத்தில் வட அரைக்கோளப்பகுதியில் வசந்த காலம் ஆரம்பமாகின்றது. தமிழ் வருடக்கணக்கில் இது 'பங்குனி' மாதமாகும். சிங்கள வருடக்கணக்கில் இம்மாதம் 'மெதின்' எனப் பெயர்பெறுகின்றது.





## ஏ

ஆங்கிலத்தில்
என்பர். Aprilis எ
மொழிச் சொல்லி
இந்த பெயர் தோ
அழகின் கடவுளா
வீனஸ்ஸினை A
இப்பெயரினை
பெயர் உருவாகி
நாட்காட்டியின்ப
இரண்ட து மா
மாதமாக ரகட
தினங்கள் மட்டு



ஜூலியஸ் சீசர்
களாக்கினார். தமி
மாகும். தமிழ் - சி
கொண்டாடப்ப
எனப்படுகின்றது

## ஜூலை



வருடத்தின் ஏழாவது மாதமாகும். ஆங்கிலத்தில் 'July' என்று அழைப்பர்.



ஜூலியஸ் சீசரின் பெயர் இந்த மாதத் திற்கு சூட்டப் பட்டுள்ளது. ரோமானிய நாட்காட்டியின்படி, ஐந்தாவது மாதமாக





இருந்த இந்த மாதம், பின்னர் ஏழாவது மாதமாக மாற்றப்பட்டது. தமிழில் 'ஆடி' மாதம் எனப் பெயர் பெறுகின்றது. சிங்களத்தில் 'எசல' மாதம் என்று அழைப்பர். கண்டி எசல பெரஹெர, கதிர்காமக் கோயில் திருவிழா உட்பட, இம்மாதத்தில் இலங்கையில் பல மத வைபவங்கள் இடம்பெறுகின்றன.



## ஒகஸ்ட்





பண்டைய ரோமானிய நாட்காட்டியில் பத்து மாதங் களே இருந்தன. ஆறாவது மாதமாக ஒகஸ்ட் கருதப்பட்டது. ரோமானிய காலத்தில் இம்மாதத்தில் 29 நாட்களே இருந்தன. ஜூலியஸ் சீசர் நாட்காட்டி உருவானதையடுத்து, இதற்கு மேலும் இரண்டு நாட்கள் சேர்க்கப்பட்டு 31 நாட்கள் கொண்ட மாதமானது. ஒகஸ்டஸ் சீசரின் பேரரசுக்கு மரியாதை செலுத்தும் முகமாக 'ஒகஸ்டஸ்' என்று பெயரிடப்பட்டது. பின்னர் 'ஒகஸ்ட்' (August) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டது. தமிழில் 'ஆவணி' எனப்படும் இம்மாதம், சிங்களத்தில் 'நிக்கினி' எனப் பெயர் பெறுகின்றது.



## செப்டெம்பர்



'செப்டெம்' (septem) என்ற லத்தீன் மொழியி லிருந்தே September என்ற சொல் உருவா கியுள்ளது. இதன் பொருள் ஏழு என்பதாகும். இது ரோமானிய நாட்காட்டியில் ஏழாவது மாதமாக இருந்தமையே இதற்கு காரணமாகும். ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்கள் முன்னிலைக்கு வந்தமையினால், செப்டெம்பர் மாதம் ஒன்பதாவது மாதமாகியது. ஆரம்பகாலத்தில் இம்மாதத்தில் 29 நாட்கள் மட்டுமே இருந்தன. ஒகஸ்டஸ் சீசர் இம்மாதத் தினை 30 நாட்களாக மாற்றினார்.

தமிழில் 'புரட்டாதி' மாதம் எனவும், சிங்களத்தில் 'பினர' மாதம் என்றும் அழைக்கப்படுகின்றது.





காரணமாக, மர
மாறும். இதனா
இதனை 'மஞ்ச
'ஒக்டோ' (octo



மாதமாகும். த
என்றழைக்கப்
சிங்களத்தில் '
பெறுகின்றது.
விவசாயிகள் எ
தயாராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கு பெயர் வந்த விதம்

## ஏப்ரல்



ஆங்கிலத்தில் 'April' மாதம் என்பர். Aprilis என்ற லத்தீன் மொழிச் சொல்லில் இருந்தே இந்த பெயர் தோன்றியுள்ளது. அழகின் கடவுளான வீனஸ்ஸினை Aphrodite என்ற பெயரில் அழைப்பர். இப்பெயரினை அடிப்படையாகக் கொண்டே April என்ற பெயர் உருவாகியுள்ளது. பண்டைய ரோமானிய நாட்காட்டியின்படி, ஏப்ரல் மாதம் வருடத்தின் இரண்டாவது மாதமாகும். பின்னர் வருடத்தின் நான்காம் மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் 29 தினங்கள் மட்டுமே இந்த மாதத்தில் காணப்பட்டன.





ஜூலியஸ் சீசர் மேலும் ஒரு தினத்தினை சேர்த்து 30 தினங்களாக்கினார். தமிழ் வருடக்கணக்கில் இது 'சித்திரை' மாதமாகும். தமிழ் - சிங்கள புத்தாண்டு இம்மாதத்திலேயே கொண்டாடப்படுகிறது. சிங்களத்தில் 'பக்' மாதம் எனப்படுகின்றது.

## மே



வருடத்தின் ஐந்தாவது மாதமாகும். ஆங்கிலத்தில் 'May' என்பர். வசந்த காலத்திற்குரிய கடவுளும் சௌபாக்கியத்தின் அதிபதியு



மான Maia Meiestas என்ற கிரேக்க பெண் கடவுளின் பெயரை அடிப்படையாக வைத்தே இந்த மாதம் பெயரிடப்பட்டுள்ளது. பண்டைய ரோமானிய நாட்காட்டியில் இம்மாதம் வருடத்தின் மூன்றாவது மாதமாக இருந்தது. ரோமானியர்கள் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களை வருடத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் மாதங்களாக மாற்றியதையடுத்து, மே மாதத்திற்கு ஐந்தாவது இடம் கிடைத்தது. தமிழில் இம்மாதத்தினை 'வைகாசி' என்பர். சிங்கள வருடக்கணிப்பில் 'வெசக்' மாதம் எனப்படுகின்றது.



## ஜூன்



ஜூனோ என்ற புராதன ரோமானியக் கடவுளின் பெயருக்கமைய இம்மாதத்திற்கு 'ஜூன்' (June) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஜூபிட்டரின் துணைவியாரே ஜூனோ கடவுள் ஆகும். அவர் இளமைக்கும் அழகுக்கும் திருமணத்திற்கும் அதிபதியாவார். இம்மாதம் தமிழில் 'ஆனி' மாதம் எனப்படுகின்றது. சிங்கள மொழியில் இந்த மாதத்தினை 'பொசொன்' என்று அழைப்பர். பூ மழை தூவும் காலம் என்பதே இதன் அர்த்தமாகும். பூக்கள் மரங்களிலிருந்து விழும் காலம் இதுவாகும்.





## ஒக்டோபர்



பண்டைய ரோமானிய நாட்காட்டியின்படி இம்மாதம் எட்டாவது மாதமாகும். ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும் இலையுதிர் காலம் காரணமாக, மரங்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். இதனால், பண்டைய என்க்லோ செக்சன்கள் இதனை 'மஞ்சள் நிற மாதம்' என்று அழைத்தனர். 'ஒக்டோ' (octo) என்ற லத்தீன் மொழியின்



அடிப்படையில் இம்மாதத்திற்கு 'ஒக்டோபர்' (October) என்ற பெயர் வந்தது. க்ரெகரியன் நாட்காட்டியின்படி வருடத்தின் பத்தாவது மாதமாகும். தமிழில் 'ஐப்பசி' என்றழைக்கப்படும் இம்மாதம், சிங்களத்தில் 'வப்' எனப் பெயர் பெறுகின்றது. இக்காலத்தில் விவசாயிகள் விதைகளை நடுவதற்கு தயாராவர்.





## நொவெம்பர்



பண்டைய ரோமானியர்களின் நாட்காட்டியின்படி, ஒன்பதாவது மாதமாக இருந்த இம்மாதம், இப்பொழுது பதினொராவது மாதமாக மாறியுள்ளது. 'நொவெம்' (novem) என்ற லத்தீன் சொல்லில் இருந்தே 'நொவெம்பர்' (November) என்ற பெயர் வந்துள்ளது. இம்மாதத்தினை தமிழில் 'கார்த்திகை' என்று அழைப்பர். சிங்களத்தில் 'இல்' மாதம் என்பர். இம்மாதம் குளிர்ச்சியான மாதமாகும்.









## டிசம்பர்



வருடத்தின் இறுதியாகவுள்ள பன்னிரெண்டாவது மாதமாகும். குளிர் காலத்துடன் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கின்றது. ரோமானியர்களின் நாட்காட்டியில் பத்தாவது மாதமாக இது இருந்தது. பின்னர் பன்னிரெண்டாவது மாதமாக மாறியது. ஆரம்பத்தில் 29 நாட்களாக இருந்து, பின்னர் 31 நாட்களைப் பெற்றது. கடும் குளிர் கொண்ட இம்மாதத்திற்கு பல பெயர்கள் உள்ளன.





Winter month, Yule month என்றும் அழைப்பர். யேசுவின் பிறப்பு நிகழ்ந்த மாதம் என்பதால் Holy month என்றும் கூறப்படுகின்றது. தமிழில் 'மார்கழி' என்றும் சிங்களத்தில் 'உந்துவப்' என்றும் இம்மாதம் பெயர் பெறுகின்றது.



பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இவற்றில் உலக சாதனை படைத்த சில பத்திரிகைகளை இங்கு நோக்குவோம்.



# உலக பத்திரிகைகளின் சுவாரஸ்யமான தகவல்கள்

## உலகின் முதலாவது பத்திரிகை

'Acta Diurna' என்பதே உலகின் முதலாவது பத்திரிகையாகும். 'நாளாந்த நிகழ்வுகள்' என்பதே இந்த




சொல்லின் அர்த்தமாகும். கி.மு. 59 இல் ரோம் நகரில் இப்பத்திரிகை வெளியானது. அக்காலப்பகுதியில் ரோம் நகரின் ஆட்சியாளராக இருந்த ஜூலியஸ் சீசர் மன்னர், தமது ராச்சியத்தின் உத்தியோகபூர்வ செய்திகளை வெளியிடும் நோக்கத்துடன் இதனை ஆரம்பித்தார். நாளாந்த வர்த்தமானி அறிவித்தலாக இந்த பத்திரிகை வெளியானது.

## அதிகம் விற்பனையாகும் பத்திரிகை



உலகில் வெளியாகும் ஆயிரக்கணக்கான பத்திரிகைகளில், அதிகம் விற்பனையாகும் பத்திரிகை ஜப்பானின் 'யொமிஉரி ஷிம்புன்' (Yomiuri Shimbun) என்ற பத்திரிகையாகும். ஜப்பானின் டோக்கியோ நகரிலிருந்து வெளியாகும் இப்பத்திரிகை, 1874 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## உலகின் மிகச் சிறிய பத்திரிகை

'உலகின் மிகச் சிறிய பத்திரிகை' என First News எனும் சிறுவர் பத்திரிகை சாதனை படைத்துள்ளது.




2006 ஆம் ஆண்டில் ஐக்கிய ராச்சியத்தின் மென்ச்செஸ்டர் நகரிலிருந்து இப்பத்திரிகை வெளியாகின்றது. இது 32 மி.மீ. x22மி.மீ அளவுடையது. 7 வயது முதல் 14 வயது வரையான பிள்ளைகளுக்காகவே இப்பத்திரிகை பிரசுரமாகின்றது.

## அதிக பிரதிகள் அச்சடிக்கப்பட்ட பத்திரிகை

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் ஆரம்பிக்கப்பட்ட 'கொம்சோமொல்ஸ்காயா பிராவ்டா' (Komsomolskaya Pravda) என்ற பத்திரிகையே, அதிக பிரதிகள் அச்சடிக்கப்பட்ட பத்திரிகை என்ற சாதனையை நிலைநாட்டி 1990 இல் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டது. இது டெப்லொய்ட் அளவிலான பத்திரிகையாகும்.




## தினசரி சிறுவர் பத்திரிகை

தினசரி (நாளாந்த) சிறுவர் பத்திரிகையாக பிரான்ஸிலிருந்து வெளியாகும் 'Mon Quotidien' என்ற பத்திரிகையினைக் குறிப்பிடலாம். 'எனது நாளாந்த பத்திரிகை' என்பதே இதன் பொருளாகும். 10 வயது முதல்14 வயது வரையிலான சிறுவர்களுக்கான இந்த பத்திரிகையானது, ஃப்ரெஞ்ச் மொழியில் வெளியாகின்றது. இந்த பத்திரிகையில் ஆக்கங்களை எழுதுவது, விடயங்களை தொகுப்பது ஆகிய பணிகளில் சிறுவர்கள் இணைத்துக்கொள்ளப் படுகின்றமை விசேட அம்சமாகும்.






## பிரபல்யம் பெற்ற ஆங்கிலப் பத்திரிகை

இந்தியாவிலிருந்து வெளிவருகின்ற 'The Times of India' என்ற பத்திரிகையானது, உலகம் முழுவதும் உள்ள ஆங்கில வாசகர்களிடையே மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது. 1838 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகையின் தலைமையகம் இந்தியாவின் மும்பை நகரில் அமைந்துள்ளது.




## இணையத்திற்குள் பிரவேசித்த முதல் பத்திரிகை



ஐக்கிய அமெரிக்காவின் 'The Tech' என்ற பத்திரிகையே, இணைய உலகினுள் பிரவேசித்த முதலாவது பத்திரிகை என்ற பெருமையைப் பெறுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் மசாச்சுசெட்ஸ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களினால் 1881 ஆம் ஆண்டு இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இது அச்சுப்பதிப்பாகவும் இணையப் பதிப்பாகவும் வெளிவருகின்றது.

(-ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய முக்கியத்துவம் மிக்க 'நெற்குதிர்'



நெல் அறுவடையினைப் பாதுகாப்பதற்காகவும் களஞ்சியப்படுத்துவதற்காகவும் அமைக்கப்படுவதுதான் 'நெற்குதிர்' ஆகும். பண்டப் பரிமாற்றப் பொருளாதாரம் நிலவிய காலத்தில் நெற்குதிர்களுக்கு பாரியளவிலான அந்தஸ்து காணப்பட்டது. நெல் நடுகை முதல் அறுவடை வரை விவசாயம் சம்பந்தப்பட்ட நம்பிக்கைகள், வழிபாடுகள், பாரம்பரிய நடைமுறைகள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட ஒரு விடயமாக நெற்குதிர் இருந்தது. முற்காலத்தில், நெற்குதிர் அற்ற விவசாயியின் வீடு பொருளாதார சுபீட்சமற்றதாகவே கருதப்பட்டது. ஆனால், 21 ஆம் நூற்றாண்டுக்குள் பிரவேசித்திருக்கும் இத்தருணத்தில், நெற்குதிர்களின் பாரம்பரிய முக்கியத்துவங்கள் விவசாய சமூகத்திலிருந்து விலகிச் சென்றுகொண்டிருப்பதாக கூறப்படுகின்றது



## நெற்குதிரின் முக்கியத்துவம்

நெல் அறுவடையின் பின்னர் அதனைக் களஞ்சியப்படுத்தல், பாதுகாத்தல் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. அந்த வகையில், நெல் களஞ்சியப்படுத்தல் மையமாக நெற்குதிர் திகழ்கின்றது. அவ்வாறு, களஞ்சியப் படுத்தப்படும் நெல்லினை நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கும் பொருட்டு, நெற்குதிர் வேய்வதில் இருந்து நெல் களஞ்சியப்படுத்தல் மற்றும் நெற்தானியங்களை அதிலிருந்து எடுத்தல் என அனைத்து செயற்பாடுகளும் பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

நெற்குதிரானது, நிலத்திலிருந்து 1-2 அடி வரையான உயரம் கொண்டதாக நிர்மாணிக்கப்படும். குதிரின் அடிப்பாகம் பதப்படுத்தப்பட்ட குச்சிகள் மற்றும் கொடிகளினால் அமைக்கப்பட்டிருக்கும்.

அத்துடன், அதன் கால்கள் போன்ற பகுதி பலமான மரக்குற்றியினாலோ அல்லது கற்தூண்களாகவோ அமைக்கப்பட்டு, அதன்மேல் நெற்குதிர் நிர்மாணிக்கப்படும். இதனால், வெள்ளப் பாதிப்பு, மண்புழுக்கள்-பூச்சிகள் பாதிப்பு மற்றும் மண்ணில் ஏற்படும் மாற்றம் என எதுவும் நெற்குதிரினை தாக்க வாய்ப்பில்லை. நெற்குதிரின் சுவர்கள் களிமண்ணினால் அமைக்கப்படுவதனாலும் நெற்குதிரின் கோள வடிவ அமைப்பு முறை காரணமாகவும் அதில் களஞ்சியப்படுத்தப்படும் நெல்லுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கும். இதனால், நெல்லில் பூஞ்சண பாதிப்புகள் ஏற்படுவது தவிர்க்கப்படும். நெற்குதிரினுள் இடப்படும் வேப்பம் இலைகள், எலுமிச்சை இலைகள் காரணமாக, பூச்சிகளின் பாதிப்பும் தவிர்க்கப்படுகின்றது. இந்த செயற்பாடுகள் விஞ்ஞான ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

திறந்தவெளி வைக்கோல் நெற்குதிர், உள்ளக வைக்கோல் குதிர், மூங்கில் குதிர், மரப்பத்தாயம், உலோகக் குதிர், விதை நெல் குதிர், சாக்குக் குதிர் என்று தானியங்களை களஞ்சியப் படுத்தும் அமைப்புகள் பல உள்ளன.

# பறவையிறகு வண்ணத்துப்பூச்சி

★ உயிரியல் பெயர்: *Troides darsius*

இலங்கைக்குரிய பிரத்தியேகமான பெரிய வண்ணத்துப் பூச்சியாக 'பறவையிறகு வண்ணத்துப்பூச்சி' குறிப்பிடப்படுகின்றது. இவ்வின வண்ணத்துப்பூச்சிகள் இலங்கை முழுவதும் பரவியுள்ளன. இதன் செட்டைகளை விரித்தால், செட்டைகளுக்கிடையிலான இடைவெளி 165 மி.மீற்றர் முதல் 180 மி.மீற்றர் வரை காணப்படும். இந்த வண்ணத்துப்பூச்சியின் முன்புற செட்டைகள் கறுப்பு நிறமானவை. பின்புற செட்டைகள் பொன்னிறமானவை. அவற்றில் கறுப்புக் கோடுகள் உள்ளன. இவ்வினமானது, இலங்கையின் தேசிய வண்ணத்துப்பூச்சியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் Sri Lankan Birdwing என்று அழைக்கப்படுகின்றது. கூட்டுப்புழுவாக இருக்கும்போது இதன் உணவு 'சப்சந்த' எனும் தாவரக் கொடி ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: **අම්මේ! මට අලුත් පොත් ගන්න ඕනේ.**
அம்மே! மட்ட அலுத் பொத் கண்ண ஓனே.
மகள்: **அம்மா! எனக்கு புதுப் புத்தகங்கள் வாங்க வேண்டும்.**

අම්මා: **පාසල පටන් ගන්න තව කල් තියෙනවා නේද?**
பாசல பட்டன் கண்ண தவ கல் தியெனவா நேத?
அம்மா: **பாடசாலை தொடங்க இன்னும் நாட்கள் இருக்கின்றன அல்லவா?**

දුව: **ඔව්. ඒ වුනාට පොත්වලට පිට කවර දාන්න ඕනනේ.**
ஒவ். ஏ வுனாட்ட பொத் வலட்ட பிட்ட கவர தான்ன ஓனனே.
மகள்: **ஆம். ஆனாலும், புத்தகங்களுக்கு உறைகள் போட வேண்டுமே.**

අම්මා: **ඔයාට පොත් ගොඩක් ගන්න තියෙනවාද?**
ஒயாட்ட பொத் கொடக் கண்ண தியெனவாத?
அம்மா: **உங்களுக்கு அதிக புத்தகங்கள் வாங்க இருக்கின்றனவா?**

දුව: **නැහැ. පොත් ටිකයි ගන්න ඕනේ.**
நெஹெ. பொத் டிக்கய் கண்ண ஓனே.
மகள்: **இல்லை. கொஞ்சம் புத்தகங்கள்தான் வாங்க வேண்டும்.**

අම්මා: **තාත්තාගෙන් සල්ලි ඉල්ලගෙන අපි හෙට යමු.**
தாத்தாகென் சல்லி இல்லகென அப்பி ஹெட்ட யமு.
அம்மா: **அப்பாவிடம் காசு வாங்கிக்கொண்டு நாம் நாளைக்குப் போவோம்.**

දුව: **අම්මේ! මට කෑම පෙට්ටියකුත් ඕනේ.**
அம்மே! மட்ட கேம பெட்டியகுத் ஓனே.
மகள்: **அம்மா! எனக்கு சாப்பாட்டுப் பெட்டியொன்றும் வேண்டும்.**

අම්මා: **ඇයි ඔයාගේ කෑම පෙට්ටිය කෝ?**
எய் ஓயாகே கேம பெட்டிய கோ?
அம்மா: **ஏன் உன்னுடைய சாப்பாட்டுப் பெட்டி எங்கே?**

දුව: **ඒක දැන් පරණයි අම්මා.**
ஏக்க தென் பரணய் அம்மா.
மகள்: **அது இப்போது பழசு அம்மா.**

අම්මා: **හොඳයි, අපි කෑම පෙට්ටියකුත් ගමු.**
ஹொந்தய், அப்பி கேம பெட்டியகுத் கமு.
அம்மா: **நல்லது, நாம் சாப்பாட்டுப் பெட்டியொன்றும் வாங்குவோம்.**

දුව: **පෑන, පැන්සලුත් ඕනේ අම්මේ.**
பேன, பென்சலுத் ஓனே அம்மே.
மகள்: **பேனை, பென்சில்களும் வேண்டும் அம்மா.**

අම්මා: **හරි, අපි ඔක්කොම ගමු.**
ஹரி, அப்பி ஒக்கொம கமு.
அம்மா: **சரி, நாம் எல்லாம் வாங்குவோம்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ......... පොත් ගන්න ඕනේ.
2. සල්ලි ............ හෙට යමු.
3. ............ පෙට්ටියකුත් ගමු.




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**As எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்ட கலப்பு வாக்கியங்கள் பின்வருமாறு.**

அ) As my sister was sick, she did not go to school yesterday.
எனது சகோதரி சுகவீனமாக இருந்ததால், அவள் நேற்று பாடசாலைக்குச் செல்லவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* As my sister was sick,
எனது சகோதரி சுகவீனமாக இருந்ததால்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* She did not go to school yesterday.
அவள் நேற்று பாடசாலைக்குச் செல்லவில்லை.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

ஆ) As the manager was not there, I spoke to the clerk.
அங்கே முகாமையாளர் இருக்கவில்லை என்பதால், நான் லிகிதருடன் கதைத்தேன்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* As the manager was not there,
அங்கே முகாமையாளர் இருக்கவில்லை என்பதால்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* I spoke to the clerk.
நான் லிகிதருடன் கதைத்தேன்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

இ) He has made the arrangements, as I told him.
நான் அவனுக்குக் கூறியவாறே, அவன் அந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளான்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* He has made the arrangements.
அவன் அந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளான்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

* As I told him.
நான் அவனுக்குக் கூறியவாறே,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

ஈ) As the parcel was heavy, I couldn't carry it.
அந்தப் பொதி பாரமாக இருந்ததால், என்னால் அதைக் காவிச் செல்ல முடியவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* As the parcel was heavy,
அந்தப் பொதி பாரமாக இருந்ததால்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* I couldn't carry it.
என்னால் அதைக் காவிச் செல்ல முடியவில்லை.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் ஸ்போர்ட்ஸ்

# சர்வதேச விருது பெறும் ஹுசேன் போல்ட்...!



சர்வதேச விளையாட்டுத்துறை பத்திரிகை சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் வருடத்தின் சிறந்த விளையாட்டுத்துறை வீரருக்கான ஆடவர் பிரிவு விருது இம்முறையும் 5 ஆவது தடவையாக ஜெமேயிக்கா நாட்டின் குறுந்தூர ஓட்ட வீரர் ஹுசேன் போல்ட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. 91 நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த நிபுணர்கள் இதற்கான வாக்கெடுப்பில் கலந்துகொண்டிருந்தனர். இதில் 27.74 சதவீதமான வாக்குகளைப் பெற்று ஹுசேன் போல்ட் சிறந்த வீரராக தெரிவாகியுள்ளார்.

கடந்த வருடம் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற உலக மெய்வல்லுனர் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 1000 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் குறிக்கப்பட்ட பதக்கங்களை வெற்றியீட்டியதன் காரணமாக, அநேகமான வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் போல்ட்டுக்கு வாக்களித்துள்ளனர். போல்ட்டுடன் சேர்பியாவின் நொவெக் ஜெக்கோவிச், லயனல் மெஸ்ஸி, ஆகியோரும் இப்போட்டியில் இடம்பெற்றிருந்தனர்.

இதேவேளை, மகளிருக்கான இதே விருதுக்கு அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணி நியூஸிலாந்திடம் தோல்வி கண்டதன் பின்னணி...!



நியூஸிலாந்திற்கு கிரிக்கெட் விஜயத்தை மேற்கொண்ட இலங்கை அணி அங்கு அனைத்துப் போட்டித் தொடர்களிலும் தோல்வியையே சந்தித்துள்ளது. இந்த தோல்விகளுக்கான காரணங்கள் எவை என்பது குறித்த ஆராய்ச்சிகள் ஆரம்பமாகிவிட்டன. பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

வீரர்கள் மீதான தனிப்பட்ட விமர்சனங்கள், முழு அணியின் மீதான விமர்சனங்கள், நம்பிக்கைக்குரிய மூத்த வீரர்கள் மீதான விமர்சனங்கள், அணியினரின் ஒழுக்கக் கட்டுக்கோப்பு மீதான விமர்சனங்கள் என பல்வேறு கோணங்களில் இந்த விமர்சனங்கள் அமைந்துள்ளன.

ஆனால், இவை எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைக்கக்கூடிய முக்கிய காரணமாக அமையக்கூடியது என்னவென்றால் மிதமிஞ்சிய நம்பிக்கையேயாகும். (Over Confidence). இந்த மிதமிஞ்சிய நம்பிக்கை எவ்வாறு வந்ததென்றால், நியூஸிலாந்து போட்டித் தொடருக்கு முன்னதாக மேற்கிந்திய தீவுகள் அணியுடன் இலங்கை அணியினர் போட்டித் தொடர்களில் கலந்துகொண்டிருந்தனர். இந்த போட்டித் தொடர்களை இலங்கை அணி இலகுவாக வெற்றியீட்டியிருந்தது. இந்த வெற்றிதான் இலங்கை அணியினருக்கு மிதமிஞ்சிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. உண்மையில் இப்போட்டித் தொடர்களில் மேற்கிந்திய தீவுகள் அணியில் முக்கியமான மூத்த வீரர்கள் எவரும் இடம்பெற்றிருக்கவில்லை. கிட்டத்தட்ட மேற்கிந்திய தீவுகளின் 'B' அணியே போட்டியில் கலந்துகொண்டது போலவே இருந்தது.

எனவே, இத்தகைய அணியுடன் வெற்றிகளை ஈட்டியமையானது, இலங்கை அணியின் உண்மையான பலம் எது? பலவீனம் எது? என்பதை கண்டறிவதற்கு போதுமானதாக அமையவில்லை. இத்தகைய நிலையில் இலங்கை அணி வெற்றிகளை ஈட்டியதையொட்டி பலரும் புகழ்ந்து தள்ளியதால் இலங்கை அணியின் மீது மிதமிஞ்சிய நம்பிக்கையை தோற்றுவிப்பதாக அது அமைந்துவிட்டது. எனவே, பலவீனமான ஓர் அணியுடன் ஈட்டிய வெற்றியில் கிடைத்த நம்பிக்கையுடன் பலமான முன்னணி நாடான நியூஸிலாந்துடன் மோதும் போது இலங்கை அணி நிலை தடுமாறித்தான் போனது. எனவே, இனிமேலாவது வெற்றி, தோல்வி எத்தகைய தரத்தில் உள்ள அணியுடன் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதைக் கவனத்தில் கொண்டே ஆய்வுகளை மேற்கொண்டு, மாற்றங்களை நிகழ்த்துவது பயன்மிக்கதாக அமையும்.

# 'புனே' அணியில் தோனி



இந்த வருடம் நடைபெறவுள்ள இந்தியன் பிரிமியர் லீக் போட்டித் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்குப் பதிலாக இடம்பெற்றுள்ள 'பூனே' அணியின் தலைமைப் பயிற்றுனர் பதவி முன்னால் நியூஸிலாந்து வீரர் ஸ்டீவன் ஃபிளேமிங்கிற்கும், அணியின்தலைமை பதவி மஹேந்திர சிங் தோனிக்கும் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் கடந்த வருடம் வரை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் மேற்படி பதவிகளை வகித்தவர்களாவார்.

அத்துடன், 'சென்னை' அணியில் இடம்பெற்றிருந்த அஷ்வின், டுப்பிளீஸ், ரஹானே ஆகியோரும் இம்முறை 'பூனே' அணியில் இடம்பெற்றுள்ளனர். மேலும், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவன் சுமித்தும் இதில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த காற்பந்தாட்ட வீரராக மெஸ்ஸி



ஆர்ஜன்டீனாவின் கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக மீண்டும் தெரிவாகியுள்ளார். சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நகரில் உலக கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் (பிபா) நடத்தப்பட்ட இந்த உத்தியோகபூர்வ தேர்வில் உலகின் பிரபல அணிகளின் பயிற்றுனர்கள், அணிகளின் தலைவர்கள், ஊடகத்துறை பிரதிநிதிகள் ஆகியோர் வாக்களிப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

உலகப் புகழ் கிரிஸ்டியானோ ரொனால்டோ, நெயிமார் ஆகியோரையும் முந்திக்கொண்டே இந்த விருதிற்கு மெஸ்ஸி உரித்துடையவர் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாஃப் கால்பந்தாட்டக் கிண்ணம் இந்தியாவிற்கு




11 ஆவது சாஃப் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை இந்தியா அணி தோற்கடித்து கிண்ணத்தை வெற்றிகொண்டுள்ளது. இந்தியாவின் கேரளா மாநிலத்தில் இடம்பெற்ற மேற்படி இறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல்கணக்கில் இந்திய அணி வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியினால் புதிய சாரணர் தலைமையகம் அங்குரார்ப்பணம்



சிற்றம்பலம் ஏ.காடினர் மாவத்தையில் அமைந்துள்ள ஐந்து மாடி தலைமையகக் கட்டடத்தின் தோற்றம்

உள்நாட்டு, வெளிநாட்டு சாரணர்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய சாரணர் தலைமையகக் கட்டடம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதான சாரணர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சாரணர் சங்கத்தின் தலைவர் சி.பட்டுவன்கல ஆகியோரும் பிரதான ஆணையாளர் நிமல் டி சில்வா இவர்களுடன் பல விருந்தினர்களும் கலந்துகொண்டனர்.



ஜனாதிபதியை சாரணர் தலைமையகத்திற்கு வரவேற்று அழைத்து வந்த இளம் சாரணர்கள்



பிரதான சாரணர்களுடன் ஜனாதிபதி புகைப்படத்தில் இணைந்துகொண்டபோது...

சாரணர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள் தமது அரசியல் வாழ்வின் வெற்றிக்கு சாரணராக இளம் பருவத்தில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பேருதவி புரிந்ததாகக் குறிப்பிட்டார். தான் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் இக்காலப்பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய ஐந்து மாடிகள் கொண்ட சாரணர்களுக்கான கட்டடத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைக்க சந்தர்ப்பம் கிட்டியமை தமது வாழ்வில் கிடைத்த பொன்னான நாள் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் எதிர்வரும் காலங்களில் சாரணர் இயக்கத்தின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் தனிப்பட்ட ரீதியில் தான் பங்களிப்பு நல்குவதாகவும், இது பற்றி அரச நிறுவனங்களுக்கும், அமைச்சரவைக்கும் அறிவுறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

2015 டிசம்பர் 22 ஆம் திகதி முதல் சாரணர் தலைமையகம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டதுடன், அதன் முதல் மாடியில் சாரணர் தலைமையக அலுவலகம் இயங்கி வருகின்றது. எதிர்வரும் இருபது ஆண்டுகளின் பின்னர் ஐந்து மாடிகள் கொண்ட கட்டடத்தின் உத்தியோக பூர்வ உரித்துடைமை தேசிய சாரணர் தலைமையகத்திற்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



சாரணர் தந்தையான பேடன் பவல் அவர்களின் சிலையை ஜனாதிபதி திறந்து வைத்தபோது...



உத்தியோகபூர்வ பயணம் நிறைவுற்ற வேளை 'ஸ்வர்ண சிங்க சின்னம்' வழங்கப்பட்டபோது...






# மரத் தூணை நேராக நிறுத்தக்கூடிய பிரதான 3 வழிமுறைகள்

சாரணர் முகாம்களில் எந்தவொரு பயன்பாட்டுக்கும் மரக் குற்றிகள் குறுக்காக அல்லது நீளமாகவே வைக்கப்படும். இத்தகைய மரக்குற்றிகளை மூன்று பிரதான தொழில்நுட்ப முறைகளின்மூலம் நேராக நிலைநிறுத்த முடியும். இது தொடர்பாக, கீழே குறிப்பிடப்படும் கோட்பாட்டு ரீதியிலான தொழில்நுட்ப முறைகளை மினி ஜெட் ஜம்போரிக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## உதவி முக்கோணக் கயிறு இழுப்பு

தூணுக்கும் தரைக்கும் இடையில் நேராக நிறுத்தி வைக்கத் தேவையானபோது இந்த முறையினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரே அளவிலான பருமனையும் பலத்தினையும் கொண்டதுமான மூன்று முடிச்சுகளை 45 பாகை கோணத்தில் தரையில் நிறுத்தப்பட்டுள்ள தாங்கியுடன் பிணைக்கப்படல் வேண்டும். கயிறு முடிச்சுகள் மூன்றும் ஒரே இடத்தில் நிலை பெறுமாறு நன்றாக இழுத்து சுற்றிக் கட்ட வேண்டும். இதன் மூலம் நேராகத் தூண் ஒன்றினை நிறுத்த முடியும்.




**கவனிக்க:** தரையில் பொருத்தப்படும் தாங்கிகள் இரண்டுக்கும் இடையிலான கோணம் 120பாகையாக இருத்தல் வேண்டும்.

✱ நடமாடும் பயன்பாட்டுக் கருவிகள் உருவாக்கத்திற்கு இந்த முறை நன்கு பொருந்தும்.

✱ உதவிக் கயிறு அறுந்தால் இதன் பலம் குன்றிவிடும்.

## உதவி மூன்று நிலை ஈட்டி அழுத்தி


இங்கு மேற்கூறப்பட்ட முறையில் கயிற்றுக்குப் பதில் ஈட்டிகள் பயன்படுத்தப்படும். உதவி மூன்று நிலை அழுத்தியினை வெற்றிகரமாகப் பயன்படுத்தும்போது நேராக நிறுத்தப்படும் தூண் உறுதியாக இருக்கும்.

**கவனிக்க:** உதவி ஈட்டிகளைப் பொருத்தும்போது ஒவ்வொரு கோணங்களும் இயலுமானவரை சமமாக இருக்க வேண்டும்.

## நிலத்தடி ஈட்டி பிணைப்பு

நிலத்தில் இரண்டு அடி ஆழத்தில் பள்ளம் அமைத்து ஊன்றப்படும் ஈட்டியின் மீது குறிப்பிட்ட தூணை நேராக நிறுத்த முடியும். இதற்கு வட்டச் சரிவினைப் பயன்படுத்த வேண்டும். சம தூரத்தில் வட்டச் சரிவுகள் சிலவற்றினைப் பயன்படுத்துவதனால் நேர் தூண் ஒன்றினை உருவாக்க முடியும்.

**கவனிக்க:** உறுதியான தற்கால பயன்பாட்டு உபகரணத்திற்கு இந்த முறை நன்கு பொருந்தும்.



யாழ்ப்பாணம்

தேசிய ஜம்போரி

இன்னும் 06 வாரங்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு விருந்து



## சிறியது எது? பெரியது எது?




## பொருத்தமான படத்துடன் இணைக்க


basketball
watermelon
butterfly
iron




asparagus
daisy
vegetable
highchair



## விடையை இலக்கத்தில் குறிப்பிடுக





## கீழே வழங்கப்பட்டுள்ள தரவுகளின்படி, சொற்களை எழுதி கட்டங்களைப் பூர்த்தி செய்க




→ இடமிருந்து வலம்
3 black
4 purple
5 blue
7 orange

↓ மேலிருந்து கீழ்
1 green
2 yellow
3 brown
6 red


## அறிவுக்கு விருந்து (06.01.2016) விடைகள்





bell
belt
bird
bread
bagel
spoon



| | | | | | |
|---|---|---|---|---|---|
| m | d | a | e | r | b |
| s | b | a | g | e | l |
| p | n | m | z | n | w |
| o | t | l | e | b | u |
| o | u | b | i | r | d |
| n | b | l | l | e | b |



## குறுக்கெழுத்துப் போட்டி இல.172




**மேலிருந்து கீழ்**

01. வீண் பேச்சு.
02. இரத்தம்.
03. ஊர்ந்து செல்லும் ஒரு பிராணி.
04. சிலர் தமது வீடுகளில் நாய் வளர்ப்பதற்கான காரணங்களில் ஒன்று.
07. ஒட்டும் தன்மை கொண்டது.
08. உயிரியல் வகைப்பாட்டில் 'ராச்சியம்' என்றும் பொருள்படும்.

**இடமிருந்து வலம்**

01. பூரணமற்ற நிலை.
04. வனம்.
05. பனிக்கட்டி கரைந்தால் இந்த நிலையை அடையும்.
06. மாடு .......... மேயும். (மாறியுள்ளது)
07. சூரியன்.
09. மனதிற்கு இனிமை தரும்.
10. கால்நடைகள் வளர்ப்பிடம். (மாறியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.171 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஊ | 2 ம | த் | 3 தை | | 4 சா |
| 5 தா | ணை | | ப் | | மை |
| ங் | | | 6 பொ | தி | |
| கு | 7 தே | 8 வா | ங் | | 9 ம |
| ழ | | 10 ச | க | | கு |
| ல் | | 11 கி | ல் | லா | டி |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

வெலிகாமம் கல்பொக்கையைச் சேர்ந்த ரிஸ்வான்-அனீக்கா தம்பதியரின் செல்வப் புதல்வன் ரிஸ்னி அஹ்மட், தனது ஏழாவது பிறந்த தினத்தை 12.01.2016 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.


## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



ஏ.அஸ்ஹா,
அல்-முபாரக் கனிஸ்ட வித்.,
மல்வானை.



எம்.தர்சியா,
அப்புத்தளை த.வித்., அப்புத்தளை.





தஜுஷியா,
க/ரஜவெல இந்து தே.கல்., ரஜவெல.



எஃப்.சுமையா,
பாத்திமா பாலிகா மு.ம.வித்.,
முறுத்தகஹமுலை.



அமீர் பாத்திமா அப்கா,
கமு/சது/அல்-மர்ஜான் மு.ம.கல்.,
சம்மாந்துறை.




ஜெ.ஜூட் கிங்ஸ்டன்,
தலவாக்கலை த.ம.வித்.,
ஹொலிரூட் கீ.பிரிவு.




எம்.சாஜித் அலி,
குளி/பண்டார கொஸ்வத்த
மு.ம.வித்.,



எஸ்.ராஷிதா,
மாறை/கொடபிடிய ஸாதாத் ம.வித்.,



ப.லினோஜன்,
புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.



இ.கீத்தனா,
யா/வடமராட்சி இந்து ம.கல்.,
வடமராட்சி.



ரொ.முகுந்தன்,
கொ/விவேகானந்தாக் கல்.,
கொழும்பு-13.

# இரையை அலகால் தூக்கி எடைபோடும் பறவைகள்



பறவைகள் தமக்குக் கிடைக்கும் இரைகளை எடைபோட்டுப் பார்த்துத்தான் கொறிக்கத் தேர்ந்தெடுக்கின்றன என்பதை தென் கொரியா மற்றும் அமெரிக்க பறவையியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



பறவைகள் தமது அலகால் இரைகளைத் தூக்கி எடையை சோதிப்பதோடு, வேர்க்கடலை போன்றவற்றை அலகால் உடைப்பதற்கு முன்னரே அவற்றினுள் இருப்பது தரமான விதைகளா? என்பதையும் கண்டறிந்துவிடுகின்றன என்று சியோல் தேசிய பறவைகள் ஆய்வுக்குழுவைச் சேர்ந்த ஆய்வாளர் பியோட்ர ஜிப்லோன்கி என்பவர் குறிப்பிட்டுள்ளார்.


# மன அழுத்தத்திற்கு மருந்தாகும் இயற்கை...!



அழகான இயற்கைக் காட்சிகள் மன அழுத்தத்தை வெகுவாகவே குறைத்துவிடுகின்றன. அழகிய பூக்கள், இரைச்சலுடன் பொழியும் மழை, குருவிகளின் இனிய ஓசை, அழகிய நீர்வீழ்ச்சிகள், அழகிய மலைத் தொடர்கள், கடற்கரைகள் என்பன மன அழுத்தத்தைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எனினும், உலகில் உள்ள அழகிய காட்சிகளை அல்லது விடயங்களை 75 வீதமானோர் ரசிக்கத் தவறிவிடுகின்றனர். இதற்கு பொருளாதார வாழ்வியல் பிரச்சினைகள் அல்லது வேகமான வாழ்க்கைமுறைகள் காரணமாக அமையலாம். இதேவேளை, உலகில் 25 வீதமானோர் மட்டுமே வாழ்க்கையில் எவ்வளவுதான் பிரச்சினைகள் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி இயற்கையை ரசிக்கிறார்கள். இத்தகையோர் மன அழுத்தங்கள் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகளை மிக வெற்றிகரமாக எதிர்கொள்பவர்களாகவும் திகழ்கின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி அறிவிப்பில் தவிர்க்கப்பட வேண்டிய கொச்சை மொழிப் பேச்சு....!

தமிழ் மொழி நிரல்

ஊடக பாடநெறி பாகம்-II பாடம் 88

அண்மைக் காலத்திலிருந்து வானொலித்துறையில் உலக அளவில் தனியார் வானொலி ஒலிபரப்புக்கள் வியாபித்துள்ளதைக் காணலாம். எஃப்.எம்.(F.M) அலைவரிசைகளின் ஊடாக ஒலிபரப்பாவதனால் இவை எஃப்.எம். அலைவரிசைகள் என அடையாளத்தைப் பெற்றுள்ளன. இலங்கையைப் பொறுத்தளவில் ஆரம்ப காலங்களில் அரசாங்கத்தின்




கட்டுப்பாட்டில் இருந்த இலங்கை வானொலி (Radio Ceylon) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC) ஆகியனவே ஒலிபரப்பு நிலையங்களாக இயங்கி வந்தன. எனினும், கால ஓட்டத்தில் உலகமே வர்த்தகமயமாகிவிட்ட நிலையில் தனியார் ஒலிபரப்புக்களின் வருகையும் தவிர்க்க முடியாததாகிவிட்டது. நவீன வருகை, நவீன தொழில்நுட்பப் புரட்சி என்ற வகையில் தனியார் எஃப்.எம். ஒலிபரப்புக்களின் அறிமுகம் மாற்றத்தின் அடையாளமாகவே கருதப்படுகின்றது.

இதனால், வானொலி நேயர்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட வானொலிகளில் தமக்குப் பிடித்தமான ஒலிபரப்பை தேர்ந்தெடுத்து செவிமடுக்கக்கூடிய மாற்றம் நிகழ்ந்தது. இத்தகைய தெரிவில் தத்தமது ஒலிபரப்பு நிலையங்களே முன்னணி வகிக்க வேண்டும் என்பதற்காக தனியாக ஒலிபரப்பு நிலையங்கள் போட்டி மனப்பான்மையோடு ஒலிபரப்புக்களை நடத்த வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. இதனைத்தான் 'ரேட்டிங்' (Rating) முறை என்கின்றனர்.




அதாவது, தனியார் ஒலிபரப்புக்களில் முதலாவது இடம், இரண்டாவது இடம், மூன்றாவது இடம் என இடம்பிடிப்பதை இந்த 'ரேட்டிங்' முறையில் அடையாளப்படுத்துகின்றனர். இந்த ரேட்டிங் முறையினை குறிப்பிட்ட சில தனியார் நிறுவனங்கள் நடத்துகின்றன. மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுகின்ற கருத்துக் கணிப்புக்கள், ஆய்வுகள் போன்ற வழிமுறைகளின் கீழ் மக்கள் மத்தியில் கூடிய அபிமானத்தை வென்றுள்ள எஃப்.எம்.ஒலிபரப்பு எது? என்பதை வரிசைப்படுத்தி இந்த நிறுவனங்கள் வெளிப்படுத்தும். இவ்வாறு 'ரேட்டிங்' முறைகளை நடத்துகின்ற நிறுவனங்கள் தற்போது இருபிரிவுகளாக உள்ளன. **ஒன்று:** உத்தியோகபூர்வமான 'ரேட்டிங்' நிறுவனங்கள் **இரண்டாவது:** புற்றீசல்கள்போல் உருவாகியுள்ள உத்தியோகப் பற்றற்ற 'ரேட்டிங்' நிறுவனங்கள். எனவே, இவ்விரு வகையிலான 'ரேட்டிங்' ஆய்வு நிறுவனங்களின் 'ரேட்டிங்' முடிவுகளை தனியார் ஒலிபரப்பு சேவைகள் தமது ஒலிபரப்புக்களுக்கான விளம்பரமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.




இருப்பினும், தனியார் வானொலிகளைப் பொறுத்தளவில் விவாதத்திற்குரிய ஒரு விடயமும் இருக்கவே செய்கின்றது. அதாவது, பத்திரிகையைப் பொறுத்தளவில் எதுவுமே பேச்சு மொழியில் எழுதப்படுதல் கூடாது. என்பதே நியதியாகும். அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வானொலியை எடுத்துக்கொண்டாலும், அறிவிப்பாளர்கள் சீரிய மொழிநடையில் பேச வேண்டியதே முறையாகும். மாறாக ஜனரஞ்சகப்படுத்தல் என்பதற்காக கொச்சை மொழியில் பேசுவதோ, எழுதுதலோ தவிர்க்கப்பட வேண்டியதாகும். இதனால், கொச்சை மொழியைப் பயன்படுத்தல் என்பது ஊடகத்துறை பண்பைப் பொறுத்தளவில் தவிர்க்கப்பட வேண்டியதாகும். ஒருவர் அறிவிப்பின் போது கொச்சை மொழியில் பேசுகின்றார் என்றால் அவருக்கு சீரிய மொழிநடை, உச்சரிப்புத் தெரியவில்லை என்பதே அர்த்தமாகும்.

எனவே, இத்தகைய நெறி தவறிய முறைகளை தவிர்ப்பதே, தரமான ஊடகத்தை கட்டியெழுப்புவதற்கான வழிமுறையாக அமையும்.

(தொடரும்)

-ரிஷபன்

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

* Practical English Learning Software DVD




* 4000 English Letter Writing Software




* 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்.....

* ஆங்கில கற்கும் மென்பொருள் DVD
* 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்
* 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

*06.01.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*
**Link Link.....**
**Pen Drive** *வெற்றியாளர்:*
த.மாதுளன்,
மூன்றாம் பிட்டி,வெள்ளங்குளம்,
மன்னார்.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
**F Thoovaanam**
என **Type** செய்து
**40404** எனும்
இலக்கத்திற்கு
**SMS** செய்யவும்

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive போட்டி
(20.01.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
20.01.2016
விடை: ..................................
பெயர்: ..................................
முகவரி: ..................................
தொ.பே.இல:..............................
பாடசாலை:..............................
தரம்: ..................................
..................................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விந்தைகள்



இன்று நீங்கள் மேற்கொள்ளப் போகும் பரிசோதனையின் மூலம் தற்போது நீங்கள் உலகம் எதிர்நோக்கும் சுற்றாடல் பிரச்சினைகள் குறித்த தெளிவினைப் பெறப் போகின்றீர்கள். நீரில் கலக்கப்படும் எண்ணெய் காரணமாக, பறவைகள் எவ்வாறான பாதிப்புகளை எதிர்கொள்கின்றன என்பது குறித்தே இன்றைய பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது.

**தேவையானவை:**

- திரவ சவர்க்காரம்
- நீர்
- மரக்கறி எண்ணெய்
- பற்தூரிகை
- பறவையின் பெரிய சிறகு



**இவ்வாறு செய்வோம்:**

1. நாம் அட்டவணையை தயாரித்துக் கொள்வோம்

| பொருள் | உறிஞ்சுகின்றது | வெளியேற்றுகின்றது | மாற்றுகின்றது |
|---|---|---|---|
| நீர் | | | |
| எண்ணெய் | | | |
| திரவ சவர்க்காரம் | | | |

2. சிறகினை எடுத்து நன்கு பரீட்சித்துப் பாருங்கள்.

3. சிறகினை நீரில் அமிழ்த்துங்கள். அது நீரினை உறிஞ்சுகின்றதா? இல்லையா? என்பதனை ஆராய்ந்து அட்டவணைப் பெட்டியில் நீரின் முன் அடையாளமிடுங்கள்.



4. சிறகினை எண்ணெயில் அமிழ்த்துங்கள். முன்பு போன்று பெறுபேற்றினை குறித்துக் கொள்ளுங்கள். சிறகில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்ந்ததா? என்று பாருங்கள்.

5. எண்ணெயில் அமிழ்த்தப்பட்ட சிறகின் மீது சற்று நீர் தெளியுங்கள். அப்பொழுது நீரினை சிறகு உறிஞ்சிக் கொண்டதா?

6. திரவ சவர்க்காரம் மற்றும் பற்தூரிகையின்மூலம் எண்ணெயினை அப்புறப்படுத்த முயலுங்கள்.



7. இறுதியில் எண்ணெயினை அப்புறப்படுத்த முடிந்ததா? சிறகு முன்பு இருந்த இயற்கைத் தோற்றத்தினைப் பெற்றதா?



## என்ன நிகழ்ந்தது?

எண்ணெய் சேர்ந்த பின்னர் சிறகின் வடிவம் மாறியுள்ளதனை காண்பீர்கள். சிறகு சருமத்திற்கு அருகாமையில் உள்ளது. இதனால், சருமத்திற்கு கதகதப்புக் கிடைப்பதுடன், உடலை உலர்வாக வைத்திருக்கவும் உதவுகின்றது. சிறகுகளில் எண்ணெய் தடவப்படுவதனால் அவற்றினால் இயற்கையான தன்மையினைப் பெற முடியாது. நீரினை அகற்றும் ஆற்றலும் அதற்கு இல்லை. கப்பல்களினால் கடலில் சேரும் எண்ணெயை பறவைகளின் சிறகுகளிலிருந்து அப்புறப்படுத்துவது மிகவும் கடினமாகும். இதனால், கடல் மற்றும் நீர் நிலைகளுக்கு அருகாமையில் வாழும் பறவைகளின் இருப்புக்கு ஏற்படும் பாதிப்பினை இதன்மூலம் உங்களால் இப்போது அறிய முடிகின்றது அல்லவா?

# நைஜர்

ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள நைஜர் நாடு பிரான்ஸிடம் இருந்து 1960 இல் சுதந்திரம் அடைந்தது. பின்னர் 1991 வரை இராணுவ ஆட்சியுடன் ஒரே கட்சியே நைஜர் நாட்டினை ஆட்சி செய்தது. அதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டே ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.



ஹௌயுஸ்ஸா இனக்குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு கோத்திர மக்கள் இன்றும் அங்கு வாழ்கின்றனர்.




ஒரு காலத்தில் 'பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்கா' எனும் குடியேற்றங்களில் ஒரு நாடாக இருந்தது.

**தேசிய மிருகமும் மலரும்**
தேசிய மிருகமோ, மலரோ குறிப்பிடப்படவில்லை.



இங்குள்ள மக்களிடையே போஷாக்கின்மை நிலவுகின்றது.

**இனங்கள்**




**மொழி** பிரெஞ்ச் (உத்தியோகபூர்வ மொழி) ஹயூஸ்ஸா, ஜேரிமா

**சமயம்** இஸ்லாம் 80%
ஏனையவை (கிறிஸ்தவம் மற்றும் சுதேச நம்பிக்கைகள்) 20%

**அரசியல்** நாடாளுமன்றக் கட்டடம்



ஜனாதிபதி மஹம்மது இசோஃபொயு

**இயற்கை வளங்கள்** யுரேனியம், நிலக்கரி, இரும்பு, பொஸ்பேற்று, தகரம், தங்கம், மொலிபீடினம், ஜிப்சம், பெற்றோலியம்.



நாணயம் - மேற்காபிரிக்க CFA ஃபிரேங்.




**தலைநகரமும் பெரிய நகரமும்**





புகழ்பெற்ற நைஜர் நதி அந்நாட்டை ஊடறுத்துப் பாய்கின்றது.



சஹாரா பாலைவனத்தின் ஒரு பகுதி நைஜர் நாட்டில் உள்ளது.



இந்நாட்டின் பாரம்பரிய உடை.



ஒரு பாரம்பரிய நடனம்.



காய்கறிகள், பழவகைகள் மற்றும் பல்வேறு தானிய வகைகள் பயிரிடப்படுகின்றன.

உணவுத் தேவைக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.



இங்குள்ள வனவிலங்கு பூங்காக்கள் சுற்றுலா கைத்தொழிலுக்கு பேருதவி புரிகின்றன.



தீவிரவாத அமைப்புகள் அங்கு இயங்குகின்றன.



நிலக்கரி வளம் அதிகளவுண்டு.



இந்நாட்டின் மாபெரும் யுரேனியச் சுரங்கம்.



தோலை மையப்படுத்திய பொருட்கள் பலவும் ஆடை உற்பத்தியும் இங்கு பிரதான கைத்தொழிலாகும்.



இஸ்லாமிய சமயம் இந்நாட்டின் பிரதான மதமாகும்.



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்லாமிய சமய இடங்களின் சிதைவுகளை இங்கு காணலாம்.

இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்தன்மை கொண்ட OLED திரைகள்



நவீன இலத்திரனியல் சாதன உலகில் மீள்தன்மை கொண்ட புதிய வகை திரையொன்று LG நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படவுள்ளது. இத்திரையானது, OLED தொழில்நுட்பத்தினையும், 18 அங்குல அளவினையும் உடையதாகக் காணப்படுகின்றது. இத்திரையினை செய்தித்தாள்கள் போன்று சுருட்டி எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பது இதன் விசேட அம்சமாகும். இது 55"அங்குல அளவுடைய இரு பக்கமும் காட்சியை வெளிப்படுத்தக்கூடிய திரை, 139 அங்குல அளவுடைய Vertical Tiling OLED (VTO) தொழில்நுட்பத்தினைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# குறைந்த விலையில் விண்டோஸ் டெப்லட்

சீனாவைச் சேர்ந்த வன்பொருள் உற்பத்தி நிறுவனமான Chuwi தனது டெப்லட் ஒன்றினை உருவாக்கியுள்ளது. Chuwi Vi8 Plus எனும் இந்த டெப்லட் ஆனது விண்டோஸ் இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக இருப்பதுடன் 8 அங்குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய IPS தொழில்நுட்பத்தினைக் கொண்ட தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

இது தவிர Intel Atom x5-Z8300 Quad-Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம், 4,000mAh மின்கலம் என்பவற்றினையும் கொண்டுள்ளது. மேலும் 100 டொலர்களுக்கு பெறுமதியான இந்த டெப்லட்டில்



தலா 2 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான வசதிகள் உள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# புதிய வசதியுடன் வெளியாகும் Samsung Galaxy S7



செம்சுங் நிறுவனம் தனது அடுத்த படைப்பான Samsung Galaxy S7 கைப்பேசியில் Micro SD பொருத்தப்பட்டு வெளியிடவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இக்கைபேசி 5.1" Display மற்றும் 2560 x1440 Pixel தீர்மானம் கொண்டுள்ளது. 4GB RAM மற்றும் BRITECELL கெமரா வசதி பொருத்தப்பட்டுள்ளது. மேலும் இது சதுரமாகவும் எந்த வகையிலும் பாவனையாளர்களின் பொக்கெட்டில் அடங்கக்கூடியதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

# ஆயுளை அதிகரிக்கும் ஜீன்கள்

மனிதனின் ஆயுட்காலத்தை 100 வருடங்களை விடவும் அதிகரிக்கக்கூடியது என நம்பப்படும் 4 வகையான ஜீன்களை (பரம்பரை அலகுகள்) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் இரத்தத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ABO எனும் ஜீன், கலங்களின் செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தும் CDKN2B எனும் ஜீன், பழ ஈய்க்களில் காணப்படும் SH2B3 வகை ஜீன் மற்றும் நிர்ப்பீடணத்துடன் தொடர்புடைய HLA எனும் ஜீன் ஆகியவற்றினை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் மாற்றத்தின் ஊடாகவே ஆயுள் அதிகரிப்பு சாத்தியமாகும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

1890 இல் லண்டன்



# உலகின் முதலாவது போக்குவரத்து சமிக்ஞை

உலகின் முதலாவது மின்சார தானியங்கி போக்குவரத்து சமிக்ஞை, 1914 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தில் உள்ள க்ளீவ்லண்ட் நகரில் நிறுவப்பட்டது.



க்ளீவ்லண்டில் போக்குவரத்து சமிக்ஞை (1914)

உலகின் முதலாவது போக்குவரத்து சமிக்ஞை 1890 ஆம் ஆண்டு லண்டன் நகரில் அறிமுகமாகியுள்ளது. ஆனால், அன்றைய காலத்தில் லண்டனில் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களில் இயங்கும் வாகனங்கள் பாவனையில் இருக்கவில்லை. மாறாக, குதிரைகள் இழுத்துச் செல்லும் வண்டிகளே பாவனையில் இருந்தன. இத்தகைய வண்டிகளுக்காகத்தான் முதன்முதலில் போக்குவரத்து சமிக்ஞைகள் அறிமுகமாகின.



வலது கைப்பழக்கம் உள்ளவர்கள் சாப்பிட அமர்ந்தால், வாயில் போடும் உணவை வலது பக்க பற்களால்தான் முதலில் மென்று சுவைத்துச் சாப்பிடுவார்கள்.

அவ்வாறே, இடது கைப்பழக்கம் உள்ளவர்கள்

# அவர்கள் அப்படி...! இவர்கள் இப்படி....!

சாப்பிடும்போது, வாயின் இடது பக்கத்தினால்தான் முதலில் உணவை மென்று சுவைப்பார்கள். இது அவரவருக்கு இயல்பாகவே வரும் ஒரு பழக்கமாகும் எனக் கூறப்படுகின்றது.

# இவ்வார கார்ட்டூன் படம்








# தேசிய கீதம்





ஆனந்த சமரக்கோன்

ஒரு நாட்டின் தேசிய சின்னங்களில் தேசிய கீதமும் ஒன்றாகும். முதன்முதலில் தேசிய கீதத்தை உருவாக்கிய நாடு ஜப்பான் ஆகும். உலகில் 23 நாடுகளில், பாடல் வரிகள் ஏதுமின்றி, வெறும் இசை மட்டுமே தேசிய கீதமாக உள்ளது.

'சிறீ லங்கா மாதா...' என்று சிங்கள மொழியில் ஆரம்பமாகும் இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றி-இசையமைத்தவர் ஆனந்த சமரக்கோன் என்பவராவார். 1940 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இந்த கீதம், 1950 ஆம் ஆண்டில்தான் இலங்கையின் தேசிய கீதமாக ஏற்கத் தீர்மானிக்கப்பட்டதோடு, 1951 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 22 ஆம் திகதி இதற்கான முழு அங்கீகாரம் கிடைத்தது.

இலங்கை தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் ஆரம்ப வரியானது, 'சிறீ லங்கா தாயே...' என ஆரம்பமாகின்றது. தமிழ் அறிஞரும் புலவருமான மு.நல்லதம்பி என்பவர் 1950 ஆம் ஆண்டில் தமிழ் மொழிபெயர்ப்பை செய்தார். எமது அயல்நாடான இந்தியாவின் தேசிய கீதமானது 'ஜன கண மன...' என ஆரம்பமாகின்றது. இந்த கீதத்தை ரவீந்திரநாத் தாகூர் இயற்றினார்.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஜனவரி 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 20, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org